# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| மாலை 1 | ஞாயிறு 12-2-39 வெகுதான்யஹூ மாசிமீ 1வ | முத்து 20 |
|---|---|---|



## பொருள் அடக்கம்


விஷயம் — பக்கம்

1. மகாத்மாஜியின் அறிக்கை ... 530
2. புதுமைப் பெண் கோபம் ... 532
3. வார நடப்பு ... 534
4. கிராமவாசியின் தேவை (அரயபுரம் ஸ்ரீ. வி. வெங்கட்டராமய்யர்., எம். ஏ. பி. எல்.) ... 535
5. தென்றல் காற்று ... 537
6. திண்ணையில் (ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்) ... 539
7. சுவாமி தரிசனம் (ஸ்ரீமதி கமலா பத்மனுபன்) ... 542
8. சௌக்கியமா? (ஸ்ரீ. கே. வேங்கடராமன் பி. ஏ.) ... 546
9. பெண் மனம் (ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன்) ... 547
10. இல்லொளி ("துகப்ரியை") ... 550
11. கிராமத்திற்கு விஜயம் (டாக்டர் டி. எஸ். ரமணி) ... 553
12. சிறுவர் பகுதி ... 555
13. என்ன சொல்லுகிறார்கள்? ... 557
14. வலை வீச்சு ... 558



"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# மகாத்மாஜியின் அறிக்கை

இரவின் இறுதியில் வரும் சூரியோதயம் போல மகாத்மா காந்தியின் அறிக்கைகள் எப்பொழுதும் அரசியலில் ஏற்படும் நெருக்கடி இருளை விலக்கித் தீர்த்து வைப்பது வழக்கம். இந்த வெற்றியை நாம் பல தடவைகள் கண்டு அனுபவித்திருக்கிறோம். அரசியல் வானம் மேற்கு திக்கில் இருட்டும் பொழுதெல்லாம் எப்பொழுது கிழக்கு வெளுக்கப் போகிறதென்றும், மகாத்மா காந்தி 'கோழி கூவ'ப் போகிறாரென்றும் பலதடவைகளில் சென்ற இருபது வருஷ காலமாக நாம் விழித்துக் காத்துக் கொண்டிருந்தது நமக்கு நன்றாகத் தெரியும்.

அதுபோல் இப்பொழுதும் இவ்வருஷத்திற்கு ராஷ்டிரபதித் தேர்தலில் நெருக்கடியும் குழப்பமும் ஏற்பட்ட வாரத்தில், மகாத்மா காந்தி 'கோழி கூவி' விடியிற் காலத்தைத் தெரிவிப்பாரென்று காத்துக் கொண்டிருந்தோம். ஆனால் கோழி கூவவில்லை. சென்ற வாரம் அவர் விடுத்த அறிக்கை பொழுது விடிந்தபின் கூவின கோழியின் குரல் போல் இருந்தது. அதற்குப் பதிலாக காக்கைகள் கத்தின. இக்குரல்களுக்கும் சில சமயங்களில் கிழக்கு வெளுப்பதுண்டு. ஆனால் இந்த சமயம் அப்படி வெளிர்க்கவில்லை.

தான் ஏன் சும்மா இருந்து விட்டாரென்பதற்கு மகாத்மா காந்தி இப்பொழுது ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையால் நாம் எதிர்பாராதபடி நெருக்கடியும் குழப்பமும் அதிகரித்து விட்டது. வலக்கை இடக்கைச் சண்டையும் வம்பும் வலுக்கும் போல் தோன்றுகிறது. வலக்கை வார்தாவிலும் இடக்கை கல்கத்தாவிலும் கூடி ஆலோசனை செய்வதாகவும், செய்யப் போவதாகவும் தெரிகிறது. காங்கிரஸில் ஒற்றுமை குறைந்து விடுமோ, பிளவுஏற்படுமோ, வெண்ணெயைத்திரட்டி எடுக்கும் சமயத்தில் தாழி உடைந்து விடுமோ என்கிற அச்சத்தை இந்தப் பிரிவுக் கூட்டங்கள் கொடுக்கின்றன. ஆனால் இச்சமயம் பிரிவு ஏற்பட்டால் பூர்ண சுயராஜ்யப்போர் நிச்சயம் சீரழியுமென்பதற்கு ஐயமேயில்லை. 20 வருஷத்துத் தியாகமும் வீண்போகும். நம் எதிரில் நிற்கும் காரியங்கள் மலைபோலிருக்கின்றன. சமஷ்டியை எதிர்க்க வேண்டும். துன்பப்படும் சமஸ்தானங்களுக்குக் கைநீட்டி நாம் உதவி புரிய வேண்டும். உதவி புரிந்து நம்முடன் சேர்த்துப் பொருத்தி சமஷ்டியில் ஒத்துழைக்கும்படி தங்கத்தில் புதைத்த ரத்னம்போல் ஓர் மணியாகச் செய்ய வேண்டும். ஆகையால் தலைவர்கள் இதுசமயம் இரண்டுகக்ஷியாகப் பிரிந்து தங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டி வாக்குவாதம் பண்ணுவதில் என்ன லாபம்? வண்டியைக் கோர்த்துத் தயார் செய்து தக்க காளைமாட்டையும் வாங்கிச் சேர்த்த பிறகல்லவோ மூக்கணங்கயிறு, தலைக்கயிறு 'கொப்பி'—எல்லாம் எந்த வர்ணத்தில் வாங்குவதென்று நாம் சண்டை போட்டுத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்? இப்பொழுது அச்சண்டையால் என்ன பிரயோசனம்? யாருக்கு லாபம்? வண்டி கோர்க்கும் பொழுதல்லவோ கண் மூடாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்? அச்சும் சக்கரமும் சரியாக அளவெடுத்து அரசியல் தேருக்கு திட்டம் போடவேண்டும். இந்த சமயம் நாம் தூங்கினால் கொல்லன் மட்டமான மருக்கை இரும்பில் அச்சைக் காய்ச்சித் திரட்டி விடுவான். சக்கரத்தை ஒதியமரத்தில் அல்லது கருவை மரத்தில் கிடாவி விடுவான். நீங்கள் எந்த மூக்கணங்கயிறு தலைக்கயிறு போட்டாலென்ன? எவ்வளவு உயர்ந்த காளைமாடு கட்டினாலென்ன? நமது பாரதநாட்டு அரசியல் பெரும் உளைப்பாதையில் ஒரு மைல் கூட ஓடாது. வண்டி முறிந்து விடும்.

ஆகையால் இந்த நெருக்கடியான சமயத்தில் வலக்கை, இடக்கைச் சண்டையை வலுக்கவிடாமல் மகாத்மாகாந்தி தன்பூர்ண அதிகாரத்தையும் செலுத்தி ஸ்ரீ. சுபாஷ் போஸை ராஷ்டிரபதியாகக் கொண்டு, கிருஷ்ண பகவான் எப்படி அர்ஜுனனின் தத்தளிக்கும் மனதை ஒன்று சேர்த்து மகாபாரத யுத்தத்தில் வழிகாட்டினரோ அப்படியே வழிகாட்ட வேண்டும். தானே முன்வந்து இந்த 40 கோடி ஜனங்களின் நாயகத்தை தானுகவே கைக்கொண்டு சாந்த வழியில் வழிகாட்டி வெற்றிகொண்டு வருவாரென்று நாம் நம்பியிருக்கிறோம்.

கே. எஸ். வேங்கடரமணி.

---

## கிணறு வெட்ட பூதமா?

திரிபுரிப் பிரதிநிதிகளுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. "இதென்னடா, கிணறு வெட்டப் போய் பூதம் கிளம்பி விட்டதே!" என்று உண்மையிலேயே அவர்கள் எல்லோரும் கலங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

சுபாஷ் சந்திர போஸுக்கு ஓட்டு செய்தவர்கள், தேர்தலின் பிறகு, தங்கள் செய்கையிலிருந்து இவ்வளவு பிரமாதமான விளைவுகள் ஏற்படுமென்று கனவிலும்கூட நினைக்கவில்லை. காந்திஜி இந்த மாதிரி நிலைமையை அர்த்தம் செய்து கொள்ளுவார் என்ற சந்தேகம் அவர்களுக்குக் கொஞ்சமாவது இருந்திருந்தால் முடிவு நிச்சயம் வேறு விதமாக இருந்திருக்கும் என்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

காந்திஜியின் கொள்கைகளையோ தலைமையையோ அதனுல் கண்டிப்பதாக அவர்கள் கருதவில்லை. இந்த விஷயத்தில் தீவிரவாதிகளும் ஸ்ரீ. போஸும் யாதொருநைப் பாசையும் வைத்துக்கொள்ள வேண்டாம்.

எப்படியானுலும் இம்மாதிரியான நிலைமையை ஏற்படுத்தியதின் பொறுப்பு முக்கியமாக திரிபுரிப் பிரதிநிதிகளுடையது என்ருலும் சர்தார் முதலிய தலைவர்களும் அதற்கு ஓரளவு காரணம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனுல் இப்பொழுது ஒன்றும் குடி முழுகிப் போகவில்லை. ஏனென்ருல் நாளைக்கு சமஸ்தான நெருக்கடி முற்றி நாடு பூராவுமே போரில் ஈடுபட நேர்ந்தால் காந்திஜியைத் தவிர வேறு யார் தலைமை வகிக்கப் போகிருர்கள்? அல்லது அவர் தான் சும்மா இருக்கப் போகிருரா?

நமது தீவிர சகோதரர்களுக்கு ஒரே வார்த்தை. வங்காளத்தில் எங்கோ கத்தினது போல "காந்தீயம் ஒழிக!" என்று மட்டும் கத்திவிட வேண்டாம். கத்தினுல் நிச்சயம் அவர்களுக்கு நாட்டிலிருக்கும் ஓரளவு செல்வாக்கும் போய்விடும். சுபாஷ் பாபுவையும் கேட்டுக் கொள்ளுகிறோம். அந்த மாதிரிக் கூச்சலைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்க வேண்டாம்.

---

## யுத்தம் மூளுகிறதா?

காங்கிரஸ் தலைமையைப் பற்றி நாடெங்கும் ரகளையாக இருக்கிறது. காந்தி ஜி என்ன சொல்லுவார், செய்வார் என்று எல்லோரும் ஆவலுடன் இருக்கிருர்கள்.

ஆனுல் காந்திஜி சொல்லுவதும் செய்வதும் காங்கிரஸ் தகராறைப்பற்றி இருக்காது. வேறு திக்கில் யுத்தம் மூண்டு கொண்டிருக்கிறது. சமஸ்தானங்களின் பிடிவாதத்திலிருந்தும் தலைமை அதிகாரத்தின் ரகசிய ஆதரவிலிருந்தும் அங்கே நிலைமை நாளுக்கு நாள் நெருக்கடியாகிக் கொண்டு வருகிறது. ராஜ்கோட்டிலும் ஜெய்பூரிலும் தலைவர்கள் கைது செய்யப் படுகிருர்கள்.

வழக்கம்போல காந்திஜி அந்த இயக்கத்திற்குத் தலைமை வகிக்க முன் வந்து விட்டார். பாய்வதற்கு முன் பதுங்க ஆரம்பித்து விட்டார். அதற்கு அறிகுறியாக வைசிராய்க்கு எச்சரிக்கை அனுப்பி விட்டார்.

(536-ம் பக்கம் பார்க்க)

குறிப்பு

# புதுமைப் பெண் கோபம்

சில வாரங்களுக்கு முன் காந்திஜி புதுமைப் பெண்ணின் மனப்போக்கைப்பற்றி எழுதினூர். இளைஞர்களின் மனதைக் கவரும் நோக்கத்துடன் தங்களை அலங்காரம் செய்து கொள்ளுகிருர்கள் என்று எழுதினூர்.

கல்கத்தாவிலுள்ள சில புதுமைப் பெண்களுக்குக் கோபம் வந்துவிட்டது. "உம்மை ரொம்ப பெரியவரென்றல்லவா நினைத்திருந்தோம். நீரும் இந்த மாதிரி பெண்களை தூஷிக்க ஆரம்பித்துவிட்டீரே! இளைஞர்கள் மனதைக்கவர நாங்கள் எங்களை அலங்கரித்துக் கொள்ளுகிறோம் என்று நீங்கள் சொல்லலாச்சா" என்றது போல் காரமாக எழுதிவிட்டார்கள்.

இதிலிருந்து ஒரு விஷயம் வெளியாகிறது. நிச்சயம் புதுமைப்பெண்ணிற்கு வேறெந்த அலங்காரம் இருந்தாலும் 'நகைச்சுவை' என்ற அலங்காரம் இல்லை என்று தெரிகிறது. காந்திஜி தற்காலத்துப் படித்த பெண்களிடையே தென்படும் ஒரு நவநாகரிகப் பித்தைப் பற்றிக் குறித்தார். அது புதுமைப் பெண்கள் எல்லோரிடமும் இருக்கிறதென்று கல்கத்தாப் பெண்கள் ஒப்புக்கொள்ளுகிருர்களா? பின் அவர்களுடைய கோபத்திற்கு என்ன பொருள்?

மேல்நாட்டு மோகம் தலைக்கேறிய சிலர் காந்திஜி கூறியவாறு இளைஞர்கள் மனதைக் கவருவதற்கே தங்களை அலங்காரம் செய்து கொள்ளுகிருர்கள் என்பதில் என்ன சந்தேகம்? உயர்ந்த குதிக்கால் செருப்புகள், பாடிஸ்கள், மஸ்லின் புடவைகள், இதெல்லாம் எதற்காக? நமது நாகரிகத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் பொருத்தமில்லாத இந்த மோகங்கள் எதற்காக?

இதனல் இளைஞர்களின் நடத்தையையோ ஆண்கள் மேல்நாட்டு மோகங்களைப் பின்பற்றுவதையோ நாம் ஆதரிப்பதாக அர்த்தமில்லை. ஸ்ரீமதி அமிருதகௌர் முதலிய ஸ்திரீ பிரமுகர்கள் கூறுவது போல் நமது பெண்கள்—படித்த பெண்கள்—கூடிய வரையில், நமது நாட்டிற்கேற்ற நடை உடை பாவனைகளையும், ஆடம்பரமற்ற வாழ்க்கை வழிகளையும் அனுசரிப்பது மேலல்லவா? நல்லதல்லவா? அவர்களுக்கல்ல—வரப்போகும் சந்ததிகளுக்கு?

புதுமைப்பெண் இளைஞர்களைக் குறைகூறுவது மட்டும் உபயோகமில்லை. அவர்களுடைய பேதமைக்கு இடம் கொடுக்காமல் தானும் நடந்துகொள்ள வேண்டிய பொறுப்பும் அவளுக்கு இருக்கிறது.

புதுமைப் பெண்கள் வெளிக் கிளம்பி விட்ட பிறகு, தைரியமாக வாழ்க்கையில் ஆணுடன் போட்டிபோட வந்துவிட்டபிறகு, ஆண்களுடைய நடத்தையைப்பற்றி புகார் செய்வது பொருத்தமில்லையே! நிலைமையை அவர்களே தான் சமாளித்துக்கொள்ளவேண்டும். மிருகங்களை எதிர்த்துப் போராடித்தான் ஆகவேண்டும். அவர்களுடைய புதுமை உண்மையானல் அது அவர்கள் தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ளுவதில் இன்றியமையாத உதவியாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

நம்மைக் கேட்டால் காந்திஜி அவர்களுக்காகப் பரிந்து பேசி கலாசாலை அதிகாரிகளுக்கு விஷயத்தைத் தெரிவிப்பதுகூட அனவசியம். புதுமைப்பெண் அந்தப் போரில் தானே வெற்றியடைந்து வெளிவந்தால் தான் அவளுக்குத் தன்னுடைய புது வாழ்வில் இடமுண்டு. எவ்விதமான பிற அனுதாபமும் உதவியும் உபயோகமில்லை. அவளுடைய வெற்றியின் மூலங்கள் அவளிடம் தான் இருக்கின்றன.

பழைய பெண்ணுக்காக சரித்திரத்தில் மனிதனை மனிதன் மாய்த்தது போதாதா? புதுமைப் பெண் கூடவா நம்மை அந்த வழியில் தூண்டவேண்டும்?

## யார் தீவிரவாதிகள்?

இடது சிறகார்கள் எனக்குறிப்பிடப்படும் அபேதவாதிகள் தாம்தான் தீவிரமான போக்குடையவர்கள் என்றும் வலது சிறகார்கள் எனப்படும் "காந்தீயர்கள்" நிதானப் போக்குடையவர்கள் என்றும் சொல்லி காங்கிரஸில் ஒரு தீவிரமான செயல் திட்டத்தை ஆரம்பித்து நடத்தவே தாங்கள் கல்கத்தாவில் கூடுவதாகவும் சொல்லுகிருர்கள். நாட்டின் முன்னே இருக்கும் திட்டத்தில் எவ்வளவு தீவிரத்தை இவர்கள் ஏற்படுத்தி இருக்கிருர்கள்? ஆனல் இவர்களுக்குத்தான் தற்கால காங்கிரஸ் திட்டத்தில், அதாவது காந்திஜியின் திட்டத்தில், நம்பிக்கை கிடையாதே! புது திட்டம் போடுகிருர்கள்.

புது திட்டம் எப்படி யிருக்கும் என்பதற்கு சூசனை சமீபத்தில் ஸ்ரீ சரத் சந்திர போஸ்

தலைமை வகித்த மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானம். அதில் வார்த்தைகள் எல்லாம் புத்தப் புதியன என்பதில் சந்தேகமில்லை. அது செயலில் எவ்வளவு புதிதாக வரப் போகிறதோ பார்ப்போம்.

அன்று ஆசாரிய கிருபாலனி சொன்னது போல "வலது" "இடது" சிறகார்களுக் குள் இருக்கும் வித்தியாசம் இதுதான். இடது சிறகார்கள் "அதைச் செய்யவேண்டும் இதைச் செய்யவேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வலது சிறகார்கள் வாயை மூடிக்கொண்டு செய்து விடுகிறார்கள். உதாரணமாக சமஸ்தானங்கள் விஷயத்தைத் தான் எடுத்துக் கொள்ளுவோமே! இன்று யார் ராஜ்கோட்டிலும் ஜெய்பூரிலும் கைது செய்யப்படுகிறார்கள்? அபேதவாதிகளா? இன்று யார் சமஸ்தானப் பிரச்னையை அகில இந்தியப் பிரச்னையாக்கி பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்தின் "அடிவயிற்றில் புளியைக் கரைக்க" வைக்கிறார்கள்? சமஷ்டி எதிர்ப்பும் அட்ட காசமும் நாளைக் கழித்து மறுநாள் சமாசாரம். இன்று நடக்கிறதே புரட்சி—அதை யார் நடத்துகிறார்கள்? இன்று யார் வைசிராய்க் குச் சவால்கூறிப் போர் முரசு கொட்டுகிறது? நிதானக் கட்சியின் தலைவரான காந்திஜி!

## சரித்திரச் சக்கரம் சுழன்று வருகிறதா?

இன்று போஸ் தயாரிக்கும் இயக்கத்தைக் கவனிக்கும்பொழுது ஞாபகம் 15 வருஷங் களுக்கு முன்பு செல்லுகிறது. அப்பொழுது தாஸ் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். அதி லிருந்து சரித்திரம் எவ்வாறு நடை பெற்றிருக்கிறது என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம்.

தேர்தல் அறிக்கையின்படி காங்கிரஸவேலை யைத் தீவிரமாக்கவேண்டியது அத்தியாவசி யம் என்கிறார்கள். அதாவது இதுவரையில் நடந்த வேலை தீவிரமில்லை என்று தீவிரவாதி கள் கருதுகிறார்கள். இதற்குமேல் தீவிரமாக எந்த திட்டமும் நடக்காது என்பதை இந்தத் தீவிரவாதிகளே தலைமை வகித்து நடத்திப் பார்த்தால்தான் அறிவார்கள். ஆனால் காங் கிரஸிற்கு ஒரு வருஷம் தலைவராயிருந்து காரியம் நடத்திய போஸிற்கு இது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். ஆகையால்தான் தீவிரவாதியான போஸ் வாயை மூடிக் கொண்டு சும்மா இருந்தார். இல்லாவிட் டால் அப்பொழுதே அட்டகாசம் செய்து கொண்டு வெளியே கிளம்பி இருக்கமாட் டாரா? மறுபடியும் ராஷ்டிரபதியாகத்தான் விரும்புவாரா?—தனது கொள்கை அங்கே நிறைவேறவில்லை என்று அறிந்திருந்தால்?

தலைவர் தேர்தலுக்கு நிற்க வேண்டாம் என்று சொன்ன நிமிஷம் முதல் தானே இந்த கொள்கைப் பேச்சும் தீவிரதிட்டப் பேச்சும் கிளம்பி இருக்கிறது. அதற்கு முன்னால் அது எங்கே?

பம்பரம் தூங்குகிறது என்றால் "ஏன் தூங்கிறது? அது இன்னும் வேகமாகவல்லவா சுற்றவேண்டும்" என்று யாராவது சொன் னால் அவர்கள் தீவிரவாதிகள் ஆவார்களா?

நமது தீவிரவாதிகள் அந்த மாதிரிதான் பேசுகிறார்கள். காங்கிரஸ் திட்டம் இதைக் காட்டிலும் துரிதமாக வேலை செய்ய முடி யாது. இவ்வளவு துரிதமாக வேலை செய்வது அவர்கள் கண்களுக்கு வேலை செய்யாதது போலவே தோன்றுகிறது. 'தூங்குகிற' பம்பரம் சுற்றுவதாகவே தெரிகிறதில்லை யல்லவா?

## சம்பள வெட்டா?

திருவல்லிக்கேணி சர்க்கார் உத்தியோகஸ் தர்கள் கூட்டுறவு பாங்கியின் கட்டிடத்தைத் திறந்து வைத்தபொழுது பிரதம மந்திரி பட்ஜட் ரகசியம் ஒன்றை லேசாக வெளியிட் டார்.

மாகாணத்தில் இந்த வருஷம் ஏற்பட்ட பஞ்சத்தாலும் மதுவிலக்காலும் சர்க்காருக்கு ஏற்படும் நஷ்டத்தை உத்தேசித்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் தங்கள் சம்பளங்களில் ஓர் சிறு பகுதியை விட்டுக்கொடுக்கத் தயா ராய் இருக்கவேண்டும் என்றார்.

சம்பளங்களைவெட்டுவதென்று சர்க்கார் உத் தேசித்திருந்தால் நாம் கேட்டுக்கொள்ளுவது ஒன்றுதான். சர்க்கார் கூடியவரையில் நான் கெஜடெட் ஆபீஸர்கள் சம்பளங்களை ஒன்றும் செய்யாமல் இருப்பது நல்லது. அவர் கள் ஏற்கனவே பெறும் சம்பளம் மிகவும் மோசமானது. அரை வயிற்று சோற்றிற்கு உயிர் ரத்தத்தை விற்றுக்கொண்டிருக்கிறார் கள் பாவம், அந்தப் பேதைகள். அவர்கள் செய் யும் வேலையோ அவர்கள் தலைக்கு மிஞ்சினது. அவர்கள் சம்பளத்தைக் குறைப்பது எந்தக் காரணத்தைக் கொண்டும் நியாயமாகாது.

கெஜடெட் ஆபீஸர்கள் சம்பளங்களை ஒரு வாறு குறைக்கலாம். நாம் ஏற்கனவே கூறி யிருக்கிறபடி சர்க்கார் டிப்டி கலக்டர் ஆபீஸை எடுத்துவிடலாம். அந்த ஸ்தானத் தையே எடுத்துவிட்டு அதில் காயமானவர் களை கஜானா டிப்டி கலக்டர்களாகவும், கமிஷ னர்களாகவும், ஸ்பெஷல் டிப்டி கலக்டர்களாக வும் போட வைத்துக்கொள்ளலாம். அந்த ஆபீஸ் 'வண்டியின் ஐந்தாவது சக்கரம்' என்று பெயர் பெற்ற டிப்டி கலக்டர்

(536-ம் பக்கம் பார்க்க)

# வார நடப்பு

ஹிட்லர் போனவாரம் கக்கிய நெருப்பை விசிறிவிட்டு கொழுந்துவிட்டு எரியச் செய்கின்றன சர்வாதிகாரப் பத்திரிகைகள். ஜெர்மன் பத்திரிகைகள் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டின்மேல் பாணம் தொடக்க ஆரம்பித்திருக்கின்றன. "உலக சமாதானத்தின் எதிரி நம்பர் 1" என்று ரூஸ்வெல்டிற்குப் பட்டம் கொடுத்திருக்கின்றன.

ஆனால் கார சாரமாய் எழுதுவதில் இதாலியின் பிரசாரகர் ஸீனர் காய்டா இளைத்தவரா என்ன? அவரும் ஸ்பெயின் தேசத்தில் ரஷ்யப்படை இருக்கும்வரை இதாலியத் துருப்புகளும் இருந்துதான் தீரும் என்று ரஷ்யாவைச் சண்டைக்குக் கூப்பிடுகிறார்.

இதற்குள், ஹங்கேரிக்கும் ஸெக்கோவுக்கும் எல்லைப்புறத்தில் தகராறுகள் நடக்கின்றன. இது எல்லாவற்றிற்கும் காரணம் ஹங்கேரியின் விஷயத்தில் ஜெர்மனி தலையிடுவதால்தான் என்று தெரிந்துகொண்டு ஹங்கேரியுடன் உள்ள சம்பந்தத்தை ரஷ்யா விலக்கிக்கொண்டு விட்டது.

ஆனால் ரஷ்யாவைப்போல வசவுக்கும் இடைஞ்சலுக்கும் உள்ளான தேசம் தற்போது வேறொன்றும் கிடையாது என்று தோன்றுகிறது. மஞ்சுகோ எல்லைப்புறத்தில் ரஷ்ய துருப்புக்களின்மேல் ஜப்பானியத் துருப்புக்கள் சுட்டுவிட்டதாகப் புகார் வந்திருக்கிறது.

ஸ்பெயின் தேச சர்க்கார் வாலன்ஷியா என்ற பிரதேசத்திற்குப் போய்விட்டதாக அறிகிறோம். கடைசிவரையில் சண்டைப் போட்டு ஜெயிக்கப் போவதாக ஸ்பெயின் மந்திரி நெக்ரின் கூறுகிறார்.

பாலஸ்தீன மகாநாட்டை ஸ்ரீசேம்பர்லேன் ஆரம்பித்துவைத்து ஆசீர்வாதம் செய்தார். அது இன்னும் ஒருமாதம் நடைபெறுமாம்.

பிரிட்டனில் மறுபடியும் வெடி குண்டுகள், 'தடார், தடார்' என்று வெடிக்கும் சத்தம் கேட்கிறது. என்ன விஷயமென்று பார்த்தால், ஐரிஷ் ரிபப்ளிகன் ஆர்மி என்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்த சில விஷமிகள் கலாட்டா செய்வதாக போலீஸ்காரர்கள் முறையிடுகிறார்கள்.

இந்த வெடுகுண்டு சம்பவத்திலிருந்து இந்தியாவுக்கு வருவோமானால் இங்கேயும் ஏராளமான குண்டு சத்தத்தைக் கேட்கிறோம். ஆனால் இங்கே வெடிகுண்டு அல்ல; வாய் குண்டு தான். எப்படியிருந்தாலென்ன? நம்மை இந்த வாய் குண்டுகளே தூக்கி வாரிப் போடுவது போதாதா?

சுபாஷின் வெற்றியைப்பற்றி பத்திரிகை நிருபர்கள் போடும் குண்டைப் பாருங்கள். காந்திஜி இனிமேல் தலைவரல்ல சுபாஷ் தான் என்கிறது ஒரு செய்தி. "இனிமேல் காந்திக்காரர்கள் காங்கிரஸை விட்டு விலகிக்கொள்ளப் போகிறார்கள். அதில் சந்தேகமில்லை" என்று குண்டு போடுகிறார் ஒரு பத்திரிகை நிருபர். "இதோ சுபாஷ் சட்டமறுப்பை ஆரம்பிக்கிறார். ஹா, ஹா!" என்று பயமுறுத்துகிறார் மற்றொரு பத்திரிகையின் அருமையான பிரதிநிதி. இப்படியாக காங்கிரஸில் ஏற்பட்ட பிளவுகளையும், ஏற்படப்போகும் விபத்துக்களையும் பற்றி நிருபர்கள் தங்களுடைய கூர்மையான மூளையால் சூக்ஷ்மமாக அறிந்து நமக்குக் கர்ம சிரத்தையாக எடுத்துச் சொல்லிப் பயமுறுத்துகிறார்கள்.

ஸமஸ்தானங்களில் வெடிகுண்டு விபத்து ஒன்றும் நிகழா விட்டாலும் அதைவிட ஆபத்தை உண்டாக்க சத்தியாக்கிரஹ இயக்கம் எங்கும் துவஜா ரோஹணமாயிருக்கிறது. ராஜ்கோட்டில் ஸ்ரீமதி கஸ்தூரி பாய் காந்தி கைது செய்யப்பட்டுவிட்ட விவரத்தைக்கேட்கிறோம். சத்யாக்ரஹம் மும்மரமாக அங்கே நடந்துகொண்டிருக்கிறது. ராஜ்கோட்டிலிருந்து போலீஸாரின் 'ஜபர்தஸ்தி'லிருந்து தப்பிக்கொண்டு ஜெய்பூர் வந்தால் அங்கே போராட்டத்தின் சுழலில் நாம் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுவோம். அதிகாரிகள் முதல் தடவை பஜாஜுடன் கண்ணாமூச்சியாட்டம் ஆடினதை விட்டு இரண்டாவது தடவை 'அரஸ்டு' செய்துவிட்டார்கள். இந்த தடவையும் கண்ணாமூச்சிதான் இதனால் பிரஜா மண்டலம் தீவிரமாக போராட ஆரம்பித்துவிட்டது. அடக்கு முறையும் தலைவிரித்து ஆரம்பித்துவிட்டது.

எல்லைப்புற மாகாணத்தில் டேரா இஸ்மெயில் கான் என்ற இடத்தில் வகுப்புக் கலவரம் உண்டான விபரத்தைக் கேட்கிறோம். அதற்குக் காரணமாயிருந்த காலிகள் சிண்டில் கைபோட அதிகாரிகள் பெஷாவரிலிருந்து புறப்பட்டுப் போயிருக்கிறார்கள்.

# கிராமவாசியின் தேவை

(அரயபுரம் ஸ்ரீ. வி. வேங்கடராம அய்யர் எம். ஏ., பி. எல்.)

சில தினங்களுக்கு முன் நமது "பாரத மணி"யின் ஆசிரியர் அவர்களைச் சந்தித்து சற்று நேரம் ஸம்பாஷணை செய்யும்படியான அரிய ஸந்தர்ப்பம் நேர்ந்தது. அவர்களைப் பார்த்தவுடன் என் ஞாபகம் முழுதும் அவர்களால் எழுதப்பட்ட "முருகன்—ஓர் உழவன்" என்ற புஸ்தகத்தின்மீது சென்றது. அவர்கள் என்னை "பாரதமணி"க்கு ஏதேனும் ஒரு கட்டுரை எழுதியனுப்பும்படி சொன்னதும் எனக்கு உழவன் ஞாபகம்தான் மேலாடிற்று. இதுமட்டுமல்ல. இப்பொழுதுள்ள நமது தேச பக்தர்களும் அரசியல் விஷயங்களில் தலைமை வகித்து நடத்துவோர்களும் நம் தேச முன்னேற்றத்துக்கு முக்கியமான ஆதாரம் உழவனுடைய நல்வாழ்க்கையும் கல்விச் செல்வமும் தான் என்று தெளிவாய்ச் சொல்லிவிட்டார்கள். ஆகையால் உழவனுடைய கஷ்ட நிஷ்டூரங்களைத் தெளிவாய் ஆராய்ந்து அவைகளுக்குத் தகுந்த பரிகாரங்கள் தேடுவதுதான் அரிய சேவையென்று தோன்றுகிறது.

நமது நாட்டில், அதிலும் கிராமங்களில் வசித்துவரும் பெரும்பான்மையான மக்களுக்கு அத்தியாவசியான பொருள்கள் சில உண்டு. அதாவது, போதுமான அளவு உணவுப் பொருளும், உடுக்க உடையும் வசிக்க வீடுகளும், சுகாதாரத்துக்கொத்த சுற்றுப் பிரதேசங்களுமே. மற்றொரு தேவை தினந்தோறும் செய்துவர வேண்டிய வேலை அமைப்பு. நமது நாட்டின் ஏழு லட்சம் கிராமங்களிலும் மேற் கூறியவை தாராளமாகக் கிடைத்துவிட்டால் தேசபக்தர்களின் லட்சியம் பெரும்பாலும் நிறைவேறி விட்டதாகவே சொல்லலாம். இதன் பிறகும் இதற்கு மேலும் ஏற்பட வேண்டிய நாகரிக வாழ்வுக்கு சாதனங்கள் அவரவர்களுடைய புத்தி கூர்மைக்கும் பழக்க ஒழுக்கங்களின் மேன்மைக்கும் ஏற்றவாறு சித்திக்குமென்று சொல்லலாம்.

மேற்கூறியபடி கிராமங்களில் வசிக்கும் ஜனங்களைக் குறித்து நோக்கங்களை நன்ருக வெளியிட்டு தலைவர்கள் அந்த ஜனங்களின் வோட்டையும் பெற்றுவிட்டார்கள். பிறகு அதற்காக வேண்டிய சட்டதிட்டங்களையும் ஸ்தாபனங்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவர்கள் கடமையாகும். அப்படி ஏற்படும் சாஸ்திரங்களின் நியாயாநியாயங்களைத் தலைவர்களே கூடி தீர்த்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொருபிரச்னை ஏற்படும்போதும் கக்ஷி வாதங்களைப் பிரசாரம் செய்யும் பொருட்டாவது பொது ஜன அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும் பொருட்டாவது கிராமவாஸிகளின் கூட்டம் கூடவேண்டிய அவசியம் இல்லை. அதிலும் இப்பொழுது நம் தேச நிலைமையில் வாதம்செய்து தீர்மானிக்கவேண்டிய திட்டங்கள் ஏதுவுமில்லை யென்றுசொல்லி விடலாம். இப்படியிருக்க சட்டசபைகளில் தற்காலம் நடந்துவரும் கக்ஷி வாதங்களைப் படிக்க சற்று ஆச்சரியம் உண்டாகிறது.

கிராமவாசிகளான பொது மக்களுக்கு அடிக்கடி கூட்டங்கள் வேண்டாம். தலைவர்கள் அவர்களுக்கு வந்தனமளிக்கவேண்டாம். கிராம வாசிகள் தற்காலம் சரிவர தெரிந்துகொள்ளக்கூடாத பிரச்னைகளைப் பற்றி புத்தி புகட்டுவதும் பிரயோஜனமில்லை. சமஷ்டி திட்டம் முதலிய பெரிய அரசியல் பிரச்னைகளைக் குறித்து தலைவர்களே தீர்மானம் செய்துகொள்ளட்டும். பெரிய அரசியல் பிரச்னைகளைக் குறித்து கிராமங்களில் கூட்டங்கள் கூடி தலைவர்கள் ஒருவருக்கொருவர் அலட்சியமாகவும் மரியாதைக் குறைவாகவும் பேசிக்கொண்டால், பொது ஜனங்களுக்கு தலைவர்களிடத்தில் அவசியம் இருக்கவேண்டிய மரியாதை பாவம் குறைவு படுமேயொழிய, அப்பேர்பட்ட கூட்டங்களில் எவ்வித பிரபிரயோஜனமும் ஏற்படுமென்று தோன்றவில்லை. தகுந்த காரணமற்ற துவேஷபுத்தி தான் உண்டாகும். வருகிற வருஷத்தில்

தேசமுழுதும் சமஷ்டிப் பிரச்னையைக் குறித்து பெரிய கிளர்ச்சி ஏற்படுமென்றே தோன்றுகிறது. அப்படி ஏற்படும் கிளர்ச்சி நிமித்தமாக மாகாண அரசியிலிலும் கிளர்ச்சி ஏற்படலாம். இந்த நிலைமையில் நமது தலைவர்கள் சற்று நிதானித்து யோசனை செய்வது அவசியமே யாகும்.

எந்த அரசியல் திட்டமானாலும் சரி பொது மக்களுக்கு அதனால் நன்மை விளையக் கூடியதா அல்லது பெரும்பாலும் தீமை விளைவிக்க கூடியதா யென்ற ஒரே காரணத்தைக்கொண்டு அதை நிறுக்க வேண்டுமேயொழிய, அந்த திட்டத்தின் அக்ஷர சுத்தம், நிறம், குறி இவைகளைப் பொருத்தாவது, தலைவர்களில் எவரானாலும் சரி, அவருடைய நெடுநாளான அபிப்பிராயங்களுக்கு மாறுபாடு இருக்கக்கூடாதென்பதைப் பொறுத்தாவது, தள்ளிவிடக்கூடாது.

பொதுமக்கள் சோற்றுக்கும் துணிக்கும் மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள். பெரும்பான்மையான அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாமல் தமக்கு எப்பொழுதாவது நல்வழி கிடைக்கும்படி தெய்வத்தை பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த கட்சியினராகிலும் சரி, அரசாங்கத்தை வகிக்கட்டும். பொதுமக்களிடம் வித்தியாசம் பாரபக்ஷமில்லாமல் அவர்களுடைய முக்கியமான தேவைகளுக்கு திட்டம் ஏற்படுத்தி சிற்சில வசதிகளை யாவது ஜனங்களுக்கு வினியோகம் செய்யவேண்டும். ஜனங்களின் பொருளாதார நிலைமை சற்று விருத்தியானதும் கல்வி நிலையும் ஓங்கிவளரும். இவைகளுக்குப் பின்னேதான் நாகரிகத்துக் கொற்றுமையான மற்ற பிரச்னைகளைப் பற்றி பொது மக்கள் அபிப்பிராயம் கொடுக்கக்கூடும். தற்காலம் நமக்கு கிடைத்திருக்கும் அரசியல் திட்டத்தில் நமக்குள்ள அவகாசங்களை வீணாக்காமல் பயன்படும்படி நம் தலைவர்களுக்குள் ஒற்றுமையுண்டாகி அவர்கள் ஒற்றுழைக்கும்படி ஈசன் அருள்புரிவாராக!

---

(531-ம் பக்கத் தொடர்ச்சி)

இடக்கை வலக்கை சர்ச்சையில் அவர் மனது இனிமேல் போகாது. அவர் கவனம் வேறு பக்கத்தில் திரும்பி விட்டது.

சமஸ்தானங்கள் வழிக்கு வராவிட்டால் பம்பாய் சர்க்கார் ராஜினாமாச் செய்துவிட வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்று அன்று சர்தார் படேல் எச்சரிக்கை செய்தார்.

பண்டித ஜவஹரும் நிலைமையைப் பரிசீலனை செய்து மற்றொரு போருக்கு இந்தியா பூராவும் தயாராக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். "எப்பொழுதும் போல காந்திஜியின் மெல்லிய ஆனால் அழுத்தமான குரல் ஏகாதிபத்தியத்தை அறைகூவி எழுந்து விட்டது" என்கிறார்.

காந்திஜியின் எச்சரிக்கை தகர்க்க முடியாத ஆதாரங்களை மூலமாகக் கொண்டு கொடுக்கப் பட்டிருக்கிறது. வைசிராய் என்ன செய்யப் போகிறார்? சமஸ்தானங்களில் உடனே தலையிட்டு நெருக்கடியைத் தீர்க்கப் போகிறாரா? அல்லது நாட்டில் மறுபடியும் ஒரு போர் குமுறும்படி செய்யப் போகிறாரா?

---

(533-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏ. வேதாசலம் அய்யரே சொல்லி யிருக்கிறார். அந்த ஆபீஸ் தேவையே இல்லை. இலாகா பரிபாஷையிலும் அதைத் தபாலாபீஸ் என்று சொல்லுவதுண்டு. அந்த ஆபீஸ் சிப்பந்திகளை தாலூகா, கலக்டர் ஆபீஸ்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடலாம். அந்த உத்தியோகஸ்தர் விசாரிக்கும் முதல் கிளாஸ் கேசுகளை முதல் கிளாஸ் அதிகாரம் கொண்ட தாலூகா மாஜிஸ்ட்ரேட்டே விசாரிக்கலாம். அவருடைய மற்ற அதிகாரங்களைக் கலக்டருக்கும் தாசில்தாருக்கும் பிரித்துவிடலாம். இதனால் ஒருவிதமான திறமைக் குறைவும் ஏற்படாதென்று நாம் அனுபவத்திலிருந்து கூறுகிறோம்.

# தென்றல் காற்று

"உங்கள் பத்திரிகையில் வேடிக்கையான சமாசாரம் நிறைய இருக்கவேண்டும். சிரிப்பு மூட்டும்படியாக ஏதாவது போடுங்கள்" என்று ஒரு அன்பர் கேட்கிறார். "ஐயா! 'விகடப் பேச்சு' போடலாமா?" என்று கேட்டால் 'ராம, ராமா! அதுவேண்டாம்!' என்று பதில் சொல்லிவிட்டு முகத்தைச் சுளித்துக் கொள்ளுகிறார். பயமுறுத்தும்போதே அவர் முகத்தில் கோபக்கனை வீசிற்றென்றால் விகடப் பேச்சைப் போட்டுவிட்டால் கோபத்தில் அவர் சண்டைக்கு வந்துவிடமாட்டாரா?

* * *

"ஐயா! எங்கள் பத்திரிகையில் ஹாஸ்யக் கட்டுரைகள் போடுகிறோம். ஹாஸ்யப் படங்கள் அடிக்கடி போடுகிறோம். இன்னும் நிறையப் போடப்போகிறோம். போதுமல்லவா?" என்ற கேள்விக்கு "உஹூம்! அது மட்டும் போதாது" என்று பதில் வந்தது. "பிறகு என்ன விதமாக ஸார், உங்களை சிரிக்கப் பண்ணுவது?" என்று சொல்லி நான் அவர் தோளில் கை போட்டேன். நண்பர் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார். சிரித்துக்கொண்டே யிருந்தார். "ஸ்வாமி! என்னுடைய இந்தக் கேள்வி எதிர்பாராத விதமாக உங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுத்ததன் காரணம் என்னவோ?" என்று திகைத்துப் போய்க் கேட்டேன். அவர் இன்னும் பலமாகச் சிரிக்கத் தொடங்கினர். கொஞ்சம் நாழி கழித்துச் சிரிப்பு ஓய்ந்தது. "உங்கள் கேள்விக்காகச் சிரிக்கவில்லை. தோளைத் தொட்டீர்களல்லவா? எனக்குக் கூச்சமாயிருந்தது. ஆகையால் சிரித்தேன்" என்றார் அந்த ஸங்கோஜி.

* * *

இந்தச் சம்பவம் உண்மையில் விகடத்திற்கே பொருத்தமாயிருக்கிறது. 'கிச்சுக் கிச்சு' மூட்டினால்தான் சில விகடங்களின் அர்த்தம் விளங்குகிறது. அதை வாசித்துச் சிரிக்கவேண்டும் என்று பத்திரிகாசிரியர் மன்றாடினால் கூட ஜனங்கள் சிரிப்பதில்லை. சிலர் 'அடடா! இதில் என்னய்யா ஹாஸ்யம் இருக்கிறது? எதற்காகச் சிரிக்கிறது? நல்ல கூத்து, ஹே, ஹே!" என்று சிரிக்கிறார்கள். எப்படியிருந்தாலென்ன, வந்தார்களா வழிக்கு! அவர்கள் சிரித்துவிட்டார்கள்! விகடம் ஜெயித்துவிட்டது!

* * *

ஆறு வருஷங்களுக்கு முன் நான் பார்த்த ஒரு நாடகத்தில் பின்வரும் ரஸமான கட்டம் வந்தது.

"ஏண்டா! வழியிலே அந்த வொம்பளை வோராளே வாத்தியா?" என்றான் ஒருவன்.

"ஏண்டா அப்படி நீ பேசறே?" என்றான் அவன் தோழன்.

"என் வாய் வொக்கை" என்றான் முன்னவன்.

ஒரே குதூகலம் சபையோர்களிடையே. அந்த நாடகம் ரொம்ப நன்றாயிருக்கிறது என்று தீர்ப்பளித்துவிட்டார்கள். ஒருவரை சிரிக்கப் பண்ணுவதற்கு இது மாதிரி லகுவான உபாயங்களை பத்திரிகைகள் கையாளலாம். அப்படிச் செய்தால் பத்திரிகைகளை படித்துவிட்டு எல்லோரும் சிரிப்பார்கள். படிப்பதற்கு முன்னாடியே சிலர் சிரிக்கலாம். சிலர் சிரித்துவிட்டு வாங்கிப் படிக்காமல் பிரிக்காமல் கூடப் போவது உண்டல்லவா?

* * *

மேற்சொன்ன விரஸமான சம்பவம் ஓர் உதாரணம். இன்னும் இதைவிட அழகிய சம்பவங்கள் சிரிப்பு மூட்டத் தயாராக இருக்கின்றன. ஆனால் நான் எழுதப்போவதில்லை. சொன்னால் பாதகமில்லை; ஆனால் எழுதக்கூடாது. சொன்னால் சீக்கிரத்தில் மறந்துவிடலாம். எழுத்தில் எழுதிவிட்டால் கண்களில் உறுத்தக்கூடியது.

* * *

மேற்படி நாடகத்தில் ஓரிருவர் ஆபாஸத்தைக் கேட்க முடியாமல் காதைப்

பொத்திக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். அதைப்போல் அம்மாதிரி ஆபாஸங்களைப் பத்திரிகையில் போட்டால் அவர்கள் கண்களை மூடிக்கொள்வார்களல்லவா? அநேகம் பேருக்குச் சிரிப்பை அளிப்பது மேலா அல்லது இரண்டு பேர்கள் கண்களை மூடிக் கொள்ளாமல் இருக்கும்படி செய்வது மேலா? ஒருவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்காவிட்டால் கூட ஒருவர் கண்களையும் உறுத்திப் புண்படுத்தாமல் இருப்பது மேலல்லவா?

* * *

பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக ஹாஸ்யம் பண்ணப்போய் கடைசியில் விகடகவி துயரத்துக் காளாவதைப் பார்த்திருக்கிறோம். கழுதையைப் போலக் கத்த ஆரம்பித்தார் ஓர் விகடகவி. விகடம் சரியாக வரவில்லை. பெருமுயற்சி செய்து பார்த்தார்; சபையோர் சிரிப்புக்கிடையில் கடைசியில் வெற்றி பெற்றார். "அட கழுதை! இதற்கு இத்தனை நாழியா?" என்று மூலையில் நின்று கொண்டிருந்த பையன் சர்ட்டிபிகேட் கொடுத்து எல்லோரையும் சிரிக்கப் பண்ணினான். விகடகவிக்கு முகம் எப்படி யிருக்கும்?

* * *

இந்த மாதிரி தடபுடலாக விகடம் செய்யப் போய் கடைசியில் அசட்டுப் பட்டத்தை கட்டிக் கொள்வதுண்டு. அப்போது "ஐயோ! விகடம் செய்யப் போய் ஏன் இப்படி அகப்பட்டுக்கொள்ள வேண்டும்? இந்த விகடம் தானா இவருக்குப் பிடித்திருந்தது" என்று சிலர் வருத்தப் படுகிறார்கள். விகடத்தைப் பொறுக்கிக் கையாளுவது கடினமான வித்தைதான். ஆனால் என்னால் முடியாத காரியம் இருக்கிறதா என்று சிலர் மனப்பால் குடிக்கும் போதுதான் அது மறுபடியும் 'விகடமா'கிறது.

* * *

விகடம் பல ரகத்தைச் சேர்ந்தது. உயர்தரப் பொருள்களைப்போல் நல்ல ஹாஸ்யத்தை நாம் காண்பது அரிது. ஆனால், மலிவாயிருக்கிறது என்பதற்காக கீழ்த்தர சாமான்களை நாம் வாங்குவது குற்றமல்லவா? கிண்டல், ஹாஸ்யம், விகடம்—இவைகளால் சமூகத்தின் ஊழல்களையும், மனிதனின் கீழ்த்தர எண்ணங்களையும் இடித்துக்காட்டி சீர்திருத்தம் செய்யலாம். ஆனால் தனிப்பட்ட எவர் மனதையும் குத்திப் புண்ணுக்கக் கூடாது. அப்படிச் செய்தால் விகடத்தின் தத்துவமே நாசந்தான். ஜொனதன் ஸ்விப்ட் தனிப்பட்டவரை நையாண்டி செய்து அதன் மூலம் ஒரு பொதுவான தீமையைச் சுட்டிக் காட்டினாரே தவிர ஒருவரையும் அதனால் தாழ்மைப் படுத்தவில்லை.

* * *

"அப்பா. உனக்கு சந்தோஷம் வேண்டுமா? கல்வி வேண்டுமா?" என்று கேட்டார் குரு.

"கல்விதான் வேண்டும்" என்றான் பிள்ளையாண்டான்.

"ஏன்? சந்தோஷ மில்லாவிட்டால் உன் வாழ்க்கை நரகமாகி விடுமே" என்றார் குரு.

"ஆண்டவனே! கல்விகற்றுப் புத்திசாலியானால் தானாகவே சந்தோஷம் வந்து விடுகிறது. கல்வியில்லாத அக்ஞானி எவ்வளவு சந்தோஷமாயிருந்தாலும் என்ன பிரயோஜனம்? சந்தோஷத்தைப் பூர்ணமாக அனுபவிப்பதற்கு முதலில் ஞானம் வேண்டாமா?"

குரு சிஷ்யனின் வார்த்தைகளைக் கேட்டுப் பிரமித்துப் போனார்.

* * *

இந்தப் பழங் கதை நினைவுக்கு வரும் போது உண்மையில் 'பாரத மணி'யின் லக்ஷியம் தெளிவாகிறது. சிஷ்யன் கூறியபடி முதலில் கல்வி வேண்டும்; அப்புறம் எல்லோரும் சிரித்துச் சந்தோஷப் படட்டும். கிராமங்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் படிப்பு வாசனை அற்றவர்கள். அவர்களுக்கு வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அறிவு புகட்டக் கங்கணம் கட்டிக்கொண்டு வெளிவந்திருக்கிறது "பாரத மணி". இந்தக் கொள்கைக்கு இடையூறு இல்லாமல் எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்க 'பாரத மணி' எப்போதும் தயாராக இருக்கிறது. ஏன், சில கிராமவாசிகளுக்காவது அறிவூட்டுவதில் "பாரதமணி" வெற்றியடைந்தால் அதைவிட எல்லோருக்கும் சந்தோஷத்தைத் தரக்கூடிய விஷயம் வேறென்ன இருக்கிறது?

கிராம சேவை:

# திண்ணையில்

(ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்)

"இந்த கிராமங்களில் இருக்கிற தரித்திரம் போவதற்கு என்ன செய்யலாம்?"

"நீங்கள்தான் யோசனை பண்ணிப் பாருங்களேன். நம்மிடம் இருக்கும் மூலப் பொருள்களை எப்படி எப்படி உபயோகிக்கலாம். காசாக எப்படிப் பண்ணுகிறதென்று? அதுதானே மேற்குச் சீமைகளிலேயும் ஜப்பானிலும் யோசித்துப் பண்ணி நம்ம கிட்ட அனுப்பிக் காசு பண்ணுகிறார்கள். குப்பையிலே எறிவதைக்கூட ஏதாவது உபயோகத்துக்குக் கொண்டுவர வேண்டும். அதுதான் சாமர்த்தியம். நீங்கள் எல்லோரும் டவுன்களில் காபி ஹோட்டல்களில் போய் குளிர்ந்த பானங்கள் சாப்பிடுகிறீர்களே, அங்கே டம்பளரோடு ஒரு வைக்கோல் துரும்புக் குழாய் கொடுக்கிறானல்லவா? அது எங்கே யிருந்து வருகிறது? நம் ஊர்களை யிருந்து இல்லை. அவைகள் 'பாக்' செய்து வரும் பெட்டியைப் பார் இனிமேலாவது. அதே மாதிரி நம் வயல்களிலே முதல் மடைத் தாள்களிலே யிருந்து எடுத்து நைஸாய் வெட்டி ஸப்ளை பண்ணுங்கோளேண்டா. அதுக்கு ஒரு புதுப் பெயர் கொடுங்களேன். ரொம்ப தூரம் அனுப்ப வேண்டுமென்றால் அந்த துரும்புகளை எடுத்து நசுங்காமல் இருக்கும்படி 'பாக்' செய்து அனுப்ப வேண்டும். நமக்கு கால்வாசி விலை கொடுத்தால் போதும். 'பாக்கேஜ்' மட்டும் ரொம்ப அழகாயிருக்க வேண்டும். பொம்மை கிம்மை எல்லாம் போட்டு மனதைக் கவர்வதாய் இருக்கவேண்டும்."

"இன்னும் என்ன பண்ணலாம், தாத்தா!"

"சிலர், வைக்கோல் தொப்பிகள் (Straw Hats) போட்டுக் கொள்கிறார்களே, அதைக் கூட நாம் பின்னலாம். பாய் செய்யலாம். வைக்கோலுக்குக் கலர் கொடுத்து ஸ்கிரீன் மாதிரி உபயோகிக்கலாம். வைக்கோல் நல்லதாக ஒடியாதபடி நல்ல கலர் உள்ளதாக இருக்க வேண்டும். பாக்கியை மாட்டுக்குப் போடலாம். மீந்த கூளத்தைக் காகிதம் (Straw board, Card board) செய்ய உபயோகப்படுத்தலாம். இதிலெல்லாம் காசு கிடைக்கும்."

"இதெல்லாம் செய்ய நாம் எப்படி கற்றுக் கொள்கிறது? எப்படிச் செய்கிறது? எங்கே விற்கிறது? இதெல்லாம் பள்ளிக் கூடத்திலே கற்பிக்கிறார்களா நம் பையன்களுக்கு?"

"அட பாவமே! பள்ளிக்கூடத்திலே இதெல்லாம் எங்கே? நம் தேசப் பொருள்களை எப்படி எப்படி உபயோகப்படுத்திச் சாமான்கள் செய்து காசு பண்ணுவது என்று சொல்லிக் கொடுத்தால் நாம் ஏண்டா இப்படி யிருக்கிறோம்? நம் பையன்கள்தான் ஏன் இப்படி வேலை யில்லாமல் திண்டாடணும்? பள்ளிக்கூடத்திலே ஸயன்ஸ் என்று ஏதோ சொல்லித் தருகிறார்களாம். அதிலே பரீக்ஷை வைத்திருக்கிறார்களாம். அதிலே பாஸ் பண்ண வேண்டுமாம். அவ்வளவோடு சரி. இப்படித்தான் சொன்னான் எங்கள் பையனும். அவனும் ஸயன்ஸிலே முதல் கிளாஸில் பாஸ் பண்ணினான். துண்டிலே மாவடு கறை பட்டு விட்டது. எப்படியடா போக்கடிக்கிறது என்றால் வண்ணானைக் கேள் என்கிறான். கெமிஸ்டிரியில் இவ்வளவு ஸாமர்த்தியம்! வீட்டிலே அரிக்கன் லாந்தர் 'பக்' 'பக்' என்று அடித்துக் கொண்டு ஒரேயடியாய் எரிய ஆரம்பித்து விட்டது. கொஞ்சம் திருகை இறக்கினதும் அணைந்து போய் விட்டது. இந்த மாதிரியே பத்து நாளாய் பண்ணிக்கொண்டிருக்கிறது, அதற்கு என்னடா பண்ணுகிறது என்று கேட்டேன். அவனும் கீழேயும் மேலேயுமாகத் திருப்பினான். இரண்டு மூன்று நாள் விளக்கு ஏத்தினது முதல் ராத்திரி பத்து மணி வரையில் போராடினான். இனிமேல் பிரயோஜனமில்லை, தூர எறிந்துவிட்டுப் புதிசு வாங்க வேண்டியது

தான் என்று சொல்லி விட்டான்! அப்புறம் ஒரு தகரக் கடைக்காரன் சரிசெய்து கொடுத்தான். இவன் எந்தக் காலேஜில் படித்தானோ? அப்படி இருக்குடா நம்ம பையன்களும் காலேஜ்களும். காசு என்னமோ அனியாயச் செலவு. காலேஜ் சம்பளமோ முன் காலத்தைவிட மிக்க ஜாஸ்தி. சாப்பாட்டு ஹாஸ்டல் சிலவு அசாத்தியம். இதற்குமேல் லைப்ரரிப் பணம்; விளையாட்டுக்குப் பணம். அதற்குமேல் டிரஸ் செலவு. பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்து விட்டாலோ அனுபவ ஞானம் கேட்க வேண்டாம். யாரோ பரீக்ஷையில் எழுதியிருந்தானுமே, M. L. A. என்றால் 'மெம்பர் ஆப் தி லுனடிக் அஸைலம்' என்று.''

"பிறகு எங்கே தான் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்? யார் உதவி செய்வார்கள்?''

"நம்ம சர்க்காரில்கூட ஒரு டிபார்ட்டுமெண்டு இருக்கிறது. அதற்கு இண்டஸ்டிரியல் டிபார்ட்மெண்டு என்று பெயர். அதற்கு ஒரு அப்ளிகேஷன் போடு. 'எங்கள் ஊரிலே நிறைய வைக்கோல் இருக்கிறது. தென்னை, வாழையுமுண்டு. கோரைகூட இருக்கிறது. இவற்றில் நாங்கள் வழக்கமாக உபயோகிக்கிறது போக பாக்கி வீணாகிறது. என்ன விதமாய்ச் செய்தால் விற்றுக் காசு பண்ணலாம்?' என்று கேள். அவர்கள் சொல்லுகிற வழியிலே நாமெல்லோரும் சேர்ந்து நடந்துகொள்வோமே.''

"அந்த மாதிரி வழிகள் சொல்லிக் கொடுக்கிற டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் கண்ணிலே படவில்லையே ரொம்ப நாளாக.''

"இருக்கிறார்கள். இருக்கிறார்கள். அவர்கள் குழாய் கிணறு போடுகிறார்கள். கியாஸ் இன்ஜின்கள், தண்ணீர் அடிக்கிற பம்புகள், கைப்பம்புகள், இன்ஜின் பம்புகள், பஞ்சு அரைக்கிற மெஷின்கள், கருப்பஞ்சார் பிழியும் இயந்திரங்கள்—இந்த மாதிரி எல்லாம் நன்றாய்ப் பார்த்து நல்லதா யிருக்கிற சாமான்களை வரவழைத்து 'பிட் அப்' பண்ணிக் கொடுக்கிறார்கள். இன்னும் என்ன செய்கிறார்களோ எனக்குத் தெரியாது. நம் தேசமே முக்கியமாக விவசாய தேசமானதால் இந்த டிபார்ட்மெண்டு மனுஷர்களை நாம் பார்க்க முடிகிறதில்லை! நம் தேசமும் மற்ற தேசங்களைப் போல கொஞ்சம் தொழில்களில் புகுந்தால் இவர்கள் நமக்கு உதவி செய்யலாம். இப்பொழுது வேண்டுமானால் இந்த விஷயங்களைக் காட்டிக் கேளுங்களேன். தெரிகிறது விவரங்கள் எல்லாம்.''

"ஏன் தாத்தா! நாம் தான் ஒன்றும் தெரியாத பட்டிக்காட்டான்களா யிருக்கிறோம். நன்றாய் தெரிந்தவர்கள்கூட அவர்களை இந்த மாதிரி விஷயங்கள் கேட்காமலா இருப்பார்கள்?''

"அடே! அதெல்லாம் நமக்கென்னத்துக்கு? நம் விஷயத்தை நாம் கேட்போம். அவர்கள் சொல்கிற மாதிரி முடியுமானால் நாமும் நடந்து கொள்வோமே.''

"அப்படியென்றால் நம் ஊரிலே இருக்கிற பச்சிலை, வேர், பட்டை, கொட்டை எல்லாவற்றையும்கூட, சீமை மருந்துகள் மாதிரி தயாரிக்கலாமே.''

"ஆஹா, நன்றாக! வழி காட்டி விட்டால் பிழைக்கப்படாதா? ஆனால் நம் மருந்துக்களுக்குத் தகுந்தாற்போல டாக்டர்களை பிரசாரம் செய்ய தயாரித்துக் கொள்ள வேண்டும் முன்னாலேயே!''

"ஒரு மனு தயாரிக்கிறேன். எல்லாரும் சேர்ந்து கையெழுத்துப் போட்டனுப்புவோம். நீங்க சொல்லுங்கோ மேலே.''

"உன் தோட்டத்துக் காய்கறிகளையும், வத்தல் போட்டு, வெளி தேசங்களுக்குக்கூட அனுப்பலாம். இப்பொழுதுமாம்பழம் கூட சீமைக்குப் போகிறதல்லவா, அதே மாதிரி ஊறுகாய் போட்டு அனுப்பலாம். காபி ஹோட்டல்கள் பக்ஷணங்கள் கூட போகலாம் வெளியே விலைக்கு. அப்பளம் கருவடாம் அவல்கூட விலைபோகும். இன்னும் எத்தனையோ விதம் செய்து அனுப்பலாம். ஆனால் அந்தந்த தேச ஜனங்களுக்கு எப்படி எப்படி பக்குவம் செய்து சாப்பிட வேண்டும் என்று நன்றாய் விபரங்கள் கொடுக்க வேண்டும். கூடுமானால் இங்கிருந்து ஆள்களைக்கூட பிரசாரத்திற்கு அனுப்ப வேண்டும். விளம்பரங்கள் சரியானபடி செய்ய வேண்டும். ஏற்றுமதியெல்லாம் விதவிதமான பேர்களுடன் அழகான முறையில் நடக்க வேண்டும். தினுசு தினுசு பெட்டிகள், விதம் விதமான ஸீஸாக்கள் இவற்றில் போட்டு அழகு அழகாக உருத்தெரியாத பேர்கள்,

னைஸான பொம்மைகள், அந்த கேஸ்கள் மீதில் இருக்கவேண்டும். பெரிய பெரிய நோடீஸ்கள் போட்டு தடபுடல் படுத்த ணும் ரொம்ப விமரிசையாக. நம்ம ஊரிலே ஓவல்டின், ஓட்ஸ் மாதிரி அதுகள். படுகிற பாட்டைப் பாரு.''

"நீங்க என்ன ஆகாசக் கோட்டை கட்டுகிறீர்களே தாத்தா? என்ன சமாசாரம்? சொப்பனமா என்ன?''

"அப்படி யிருக்கிறதா உங்களுக்கு? இந்தச் சொப்பனமே பலிக்காதா என்ன? என்ன பிரமாதம்? நம்ம ஜனங்களுக்கு இன்னும் புத்தி வரவேண்டும். ஒற்றுமையாகப் பத்துபேர் சேர்ந்து நடத்தினுல் எல்லோரும் பிழைக்கலாம். இல்லையென்ருல் எல்லோரும் அடியோடு அழிய வேண்டியதுதான் என்று தெரிந்துகொண்டால் பலிக்கிறது. தனவந்தர்கள் அநேகர் கூட்டு சேர்ந்து தொழிற்சாலைகள் நடத்தலாம். நாம் மூலப் பொருள்கள் கொடுக்கலாம். தொழிலாளிகள் எல்லோரும் பிழைக்கலாம்.''

"எங்கே! தாத்தா, நம் ஜனங்கள்தான் ஒத்தனேடொத்தன் சேர்ந்து பிழைக்கிறதில்லையே. காலமே கூடி ஒரு கறிகாய்க் கடை வைத்தால் மத்தியானம் அடிதடியில் வந்து சாயங்காலம் கடைமூடியாகி விடுகிறது. ஒத்தனை ஒத்தன் நம்புகிறதில்லையே.''

"அதனுல்தான் நாம் கெடுகிருேம். கெட்டோம். இனிமேலாவது சரியாக நடக்க வேண்டாமா?''

---


உத்தரவாதமான
மரச்சாமான்களுக்கு

**கஸின் & கோ.**

17-18, பிராட்வே,
சென்னை.

போன்: 4221

# சுவாமி தரிசனம்

(ஸ்ரீமதி கமலா பத்மனாபன்)

லலிதா—“என்ன விசாலம், நீ தலக்காடுக்குச் சென்று சென்ற நவம்பர் 21ம் தேதி நடந்த பஞ்சலிங்க மகோத்ஸவத்தைப் பார்த்துவிட்டு வந்தாயாமே! நீ போன பொழுது எனக்கு ஒரு வார்த்தை சொல்லியிருக்கக்கூடாதா? உற்ற துணை இருக்கும் பொழுது நானும் வந்து கொஞ்சம் புண்யத்தைக் கட்டிக்கொண்டிருப்பேனே!”

விசாலம்—“நீ இப்படிச் சொல்வாயென்று எனக்கு முன்னடியே தெரியும். ஆனல் தப்பு என்பேரில் இல்லை. மதுருவிலிருந்து அவர்களுடைய சொந்தக்காரில் என் நாத்தனரும் அவர் அகமுடையானும் குழந்தைகளுடன் வந்திருந்தார்கள். அவர்கள் மைசூரில் எங்களாத்தில் இறங்கி, என்னை மாத்திரம், இந்த உத்ஸவத்தை சேவிப்பதற்காக, தலக்காடுக்கு அழைத்துச் சென்ருர்கள். என் அகத்துக்காரருக்குக்கூட இது விஷயத்தில் சற்று மனத்தாங்கல் தான். ஆனல், என் நாத்தனர், காரில் ஒருவருக்குத் தான் இடமிருக்கிறதென்று சொல்லி என்னை மாத்திரம் அழைத்துக்கொண்டு போனர். விஷயம் இப்படி இருக்கும்பொழுது நான் உனக்கு எப்படிச் சொல்லி அனுப்பியிருக்க முடியும்? நீயே சொல்.”

லலிதா—“ஓஹோ, அப்படியா? கிடக்கிறது, போ. அதெல்லாம் கொடுத்து வைத்தவர்களுக்குத் தான் கிடைக்கும்! ஆமாம், இந்தத் தலக்காடு மேன்மையைப்பற்றி என்னென்னமோ சொல்லிக் கொள்கிருர்களே! நீ தான் நேரக் கண்ணுரப் பார்த்துவிட்டு வந்திருக்கிருயே! எனக்குக் கொஞ்சம் இந்த ஊரைப்பற்றிய மஹிமையைச் சொல்லக் கூடாதா?”

விசாலம்—“இந்தப் புண்ய ஸ்தலத்தைப் பற்றி அனேக விசேஷ சமாசாரங்களை சில சிறிய புஸ்தகங்கள் மூலமாக கன்னடத்தில் வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. அவைகளைப் படித்தால் நீ அநேக விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம். ஆனல் நீ என்னை லக்ஷியம் செய்து கேட்கிறபடியால் எனக்குத் தெரிந்தவற்றை சொல்கிறேன் கேள்.

“தலக்காடு மைசூர்சமஸ்தானத்திலிருக்கும் புராதனப் பட்டணங்களில் ஒன்று. இப்பொழுது இந்த ஊரின் சில பாகங்கள் மணலுக்கடியில் புதைந்திருந்தாலும் கூட, முன்னெரு காலத்தில், இது ஒரு பிரபலமான ராஜ்யத்திற்கு ராஜதானியாக இருந்ததாம். இவ்வூர் மைசூருக்குத் தென்கிழக்கில், 30 மைல் தூரத்தில், காவேரி நதியின் இடது தீரத்தில் இருக்கிறது. இந்த ஊருக்கு யாத்ரீகர்கள் செல்வதற்காக மைசூரிலிருந்தும் மத்தூரிலிருந்தும் பஸ் வசதி இருக்கிறது. இங்கு ஒரு அதிசயமென்னவென்ருல், சாதாரணமாய் மேற்கிலிருந்து கிழக்கே பாயும் காவேரி நதி இந்த க்ஷேத்திரத்தில், கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, முதலிய நான்கு திசைகளிலும் விநோதமாய் வளைந்து வளைந்து பாய்கிறது. காவேரி நதியை தக்ஷிண கங்கை என்று கூறுவதுபோல் இந்தத் தலக்காடு என்கிற கஜாரண்ய க்ஷேத்திரத்தை “தக்ஷிண காசி” என்பதாகச் சொல்கிருர்கள். அவ்வளவு சிரேஷ்டமான இடமாம். காசிக்கருகில் இருக்கும் “பிரயாகை” என்ற புண்யஸ்தலத்தைப்போல், தலக்காடுக்கருகிலும், “ஸத்யகால்” என்ற ஒரு இடத்தை “பிரயாகை”க்கு நிகராக ஒப்பிடுகிருர்கள். இந்த க்ஷேத்திரம் தலக்காடுக்கு மேற்கில் இருக்கிறது. இங்கு காவேரி, கபிலா மற்றும் “ஸ்படிகம்” என்ற ஸ்ரோவாமும் கூடி சங்கமம் ஆகி திருவேணி க்ஷேத்திரமாக விளங்குகிறது. இந்த...”

லலிதா—“ஆமாம்! இந்த தலக்காடு என்கிற கஜாரண்ய க்ஷேத்திரத்தைப்பற்றி ஏதோ கதை உண்டாமே! அதென்ன?”

விசாலம்—“அதைத்தான் நானும் இப்பொழுது சொல்லவந்தேன். அதற்குள் அவசரப்படுகிருயே! ஸ்ரீராமன் இலங்கைக்குச்செல்லும் மார்க்கத்தில் இந்த இடத்தில் தங்கிச் சென்ருராம். இந்த இடத்திற்கு தலக்காடு என்றும் கஜாரண்ய க்ஷேத்திரம் என்றும் பெயர் வந்ததற்குக் காரணமான ஒரு கதையைச் சொல்கிறேன், கேள். வெகுகாலத்திற்கு முன்பு ருசீக மஹரிஷி இந்த இடத்தில் சித்தாச்ரமம் ஏற்படுத்திக்கொண்டு தவம் செய்து வந்தாராம். அப்பொழுது காசி விச்வநாதஸ்வாமி, தன் பக்தனை சோமதத்தனையும் அவனது சிஷ்யர்களையும் மேற்சொன்ன இடத்திற்குச் சென்று தவம்செய்து தன்னுடைய அருளை அடையும்படி ஆக்ஞா

பித்தாராம். அவர்களும் பரமேச்வரன் ஆக்ஞையை சிரமேற்கொண்டு, இந்த இடத்தை நெருங்குகையில் காட்டானைகளால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனராம். அவர்கள் அனைவரும் மரிக்குந் தருவாயில் யானைகளைப் பற்றிய நினைவே கொண்டிருந்தபடியால் அவர்கள் மறு ஜன்மத்தில் யானைகளாகப் பிறந்து ருசீக முனிவருடைய ஆச்ரமத்தருகில் வசித்து வந்தனராம். இதே சமயத்தில் காசிவிச்வனாதர் இந்த இடத்திற்கு வந்து ஒரு "சால்மலீ" விருக்ஷத்தின் அடியில் தன்னை சிவலிங்கமாக உற்பத்தி செய்துகொண்டு இருந்து வந்தாராம். இம்மரத்திற்கு சமீபத்தில் "மணிகர்ணிகையும்" "கோகர்ண தீர்த்தம்" என்ற தடாகமாக உற்பத்தியானுளாம். பூர்வஜன்ம வாசனையுடைய யானைகளான ஸோமதத்தனும் சிஷ்யர்களும் இந்த கோகர்ண தீர்த்தத்தில் பிரதிதினமும் ஸ்னனம் செய்து அங்கு முளைத்திருக்கும் தாமரைப் புஷ்பங்களைப் பறித்து, மரத்தடியில் அமர்ந்திருந்த சிவலிங்கத்தை பக்தியுடன் பூஜை செய்து வந்தனராம். இந்த யானைகள் நாள் தவருமல் இப்படிச் செய்து வருவதைக் கவனித்துக்கொண்டிருந்த "தலா" "காடா" என்ற இரு வேடர்கள் அந்த மரத்தடியில் என்னதானிருக்குமென்று எண்ணி அம்மரத்தின் அடிபாகத்தைக் கோடாலியினுல் வெட்டத் தொடங்கினுர்களாம். உடனே கோடாலி அவ்விருக்ஷத்தின் அடியிலிருந்த சிவலிங்கத்தின்மேல் பட்டு ரத்தம் பீறிட்டு அடித்ததாம். இதைக் கண்ணுற்ற வேடர்கள், சிவலிங்கத்தை வெட்டிய பாவத்திற்கு ஆளானேமே என்று அச்சங்கொண்டு மூர்ச்சை அடைந்தார்களாம். சிறிது நேரத்தில் அவர்களுக்கு நினைவு வந்ததும், தாங்கள் அறியாமற் செய்த குற்றத்தை க்ஷமித்தருளும்படி சிவபெருமானை மனமாற வேண்டிக்கொண்டார்களாம். அப்பொழுது ஒரு அசரீரிவாக்கு உண்டாகி அந்த "சால்மலீ" விருக்ஷத்துப் பாலை எடுத்து சிவலிங்கத்தின்மேல் ஏற்பட்ட காயத்திற்கு தடவும்படியாகவும் அப்படிச் செய்தால் உதிரப் பெருக்கு நின்று அதற்குப் பதில் பால் கவிந்தோடுமென்றும், அந்தப் பாலை அவ்வேடர்கள் பருகினுல் முக்தி யடைவார்களென்றும் சொல்லிற்றும். இதைக்கேட்ட வேடர்கள் சந்தோஷங்கொண்டு கடவுளின் ஆக்ஞைப்படி செய்யவும் ரத்தம் நின்று பால் பெருகத் தொடங்கியதாம். உடனே அவ் வேடர்கள் அந்தப் பாலை பானம் செய்து சித்தி அடைந்தார்களாம். இந்த சமயத்தில் இங்கு வந்த யானைகளான ஸோமதத்தனும் சிஷ்யர்களுங் கூட அதே பாலைப் பருகி மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைப் பெற்றுர்களாம்.

"மேற்சொன்ன சம்பவம் நடந்த பிறகு இந்த இடத்திற்கு கஜாரண்ய க்ஷேத்திரம் என்றும், "தலா" "காடா" என்ற அவ்விரு வேடர்களின் பெயர்களையும் சேர்த்து "தலக்காடு" என்றும் ஏற்பட்டதாக ஸ்தல புராணத்திலிருந்து தெரிகிறது."

லலிதா—"ஆமாம், இந்த ஒரு சிவலிங்கத்தின் கோவில் தானே அங்கிருக்கிறது? "பஞ்சலிங்க தரிசனம்" என்று எப்படிப் பெயர் ஏற்பட்டது?"

விசாலம்—"நீ சுத்த அவசரக் குடுக்கை. எனக்கு மூச்சு விடக்கூட அவகாசம் கொடுக்க மாட்டேன் என்கிருயே! ஐந்து லிங்கங்களின் வெவ்வேறு தேவஸ்தானம் உண்மையில் அங்கு இருக்கிறபடியால் தான் "பஞ்சலிங்க தரிசனம்" என்று ஏற்பட்டது. இந்த ஐந்து லிங்கங்களிலும் முக்கியமானது "வைத்யேச்வரர்" என்ற லிங்கம். இந்த லிங்கத்தினுல் தான் யானைகளுக்கும் வேடர்களுக்கும் மோக்ஷம் கிடைத்தது. ஈச்வரர் தன்னுடைய காயத்திற்கேற்ற மருந்தைத் தானே சொல்லியபடியால் இந்த லிங்கத்திற்கு "வைத்யேச்வரர்" என்று பெயர் ஏற்பட்டதாம். மேலும் ஈச்வரன் இதே ஊரில் காவேரி உத்திரவாகினியாகி யிருக்குமிடத்தில் "அர்க்கேச்வரர்" என்ற லிங்கமாயும் பூர்வவாஹினியில் "பாதாளேஸ்வரர்" என்ற லிங்கமாயும், தக்ஷிண வாஹினியில் "ஸைகதேச்வரர்" என்ற லிங்கமாயும் பஸ்சிமவாஹினியில் "மல்லிகார்ஜுனேச்வரர்" என்ற லிங்கமாயும் உற்பத்தியாகி விளங்குகிருர். மத்தியில் வைத்யேச்வரர் கோவிலும், சுற்றி நான்கு திசைகளிலும் இதர நான்கு லிங்கங்களின் கோவில்களும் இருக்கின்றன. ஆதியில், அர்க்கேஸ்வரர் சூர்யனுலும், பாதாளேஸ்வரர், வாஸுகியாலும், ஸைகதேஸ்வரர் பிரும்மாவினுலும், மல்லிகார்ஜுனேச்வரர் காமதேனுவினுலும் பூஜிக்கப்பட்டதாக ஒரு ஐதீகம் உண்டாம். மேற்சொன்ன ஐந்து லிங்கங்களையும் தனித்தனியாகத் தரிசனம் செய்ய குறிப்பிட்ட வெவ்வேறு விசேஷ நாட்கள் இருக்கின்றன. வைத்தியேச்வரனை தரிசிக்க சித்திரை மாதப் பௌர்ணமியும், அர்க்கேச்வரனுக்கு தைமாத ஸப்தமியும், பாதாளேச்வரனுக்கு ஆடி மாதப் பஞ்சமியும் ஸைகதேச்வரனுக்கு மாசி மாத சதுர்த்தசியும் மல்லிகார்ஜுனேச்வரனுக்கு அற்பசி மாத திருதியையும் ஏற்ற தினங்களாகச்சொல்லப்படுகின்றன. ஆனுல் எந்த வருஷத்தில் ஓரே நாளில், கார்த்திகை மாதமும், திங்கட்கிழமையும், அமாவாசையும், விசாக நக்ஷத்திரமும் குஹுயோகமும் சேர்ந்து ஏற்படுகின்றனவோ அன்று தான் பஞ்சலிங்கங்களுக்கும் அபிஷேகம் பூஜை, எல்லாம் செய்

யப்பட்டு, ஒரு பெரிய மகோத்ஸவமாகக் கொண்டாடப்படுகிறது. இதுவே "பஞ்ச லிங்க தரிசனம்" இந்த விசேஷ நாள் பல வருஷங்களுக்கொருமுறை தான் சம்பவிக்கிறதாம். அதாவது, ஐந்தாறு வருஷங்களுக்கு ஒரு முறையோ, சில சமயம் பதினைந்து அல்லது பதினாறு வருஷங்களுக்கு ஒரு தடவையோ தான் நேரிடுகிறதாம். வட இந்தியாவில் கொண்டாடப்படும் "கும்பமேளம்" என்ற உத்ஸவத்தைப் போலவும் கும்பகோணத்தில் நடக்கும் "மகாமகம்" என்ற உத்ஸவத்தைப் போலவும் இதுவும் ஒன்று. அதிக நியமமாக பஞ்சலிங்க தரிசனம் செய்பவர்கள் முதன் முதல் கோகர்ண தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து ஈர வஸ்திரத்துடனேயே அருகிலிருக்கும் கோகர்ணேசுவரரையும் சண்டிகா தேவியையும் வணங்கிவிட்டு பிறகு வைத்யேச்வரனை தரிசனம் செய்கிறார்கள். பிறகு காவேரி வெவ்வேறு முகமாகப் பாயும் எல்லா கரையிலும் ஸ்னானம் செய்து அங்கங்கு இருக்கும் மற்ற நான்கு லிங்கங்களையும் தரிசிக்கிறார்கள்.

"இந்த குறிப்பிட்ட விசேஷத்தில் பஞ்ச லிங்கங்களையும் பரிசுத்த மனதுடனும், பய பக்தியுடனும் தரிசனம் செய்பவர்களின் எல்லாவிதப் பிரார்த்தனைகளையும் சிவபெருமான் நிறைவேற்றுவதாக நம்பப்படுகிறது."

**லலிதா**—"அப்படியானால், இந்தப் பஞ்ச லிங்கங்களின் தேவாலாயங்களும் ஒன்றுக்கொன்று சமீபத்திலேயே இருக்கின்றனவா ? இங்கு தீர்த்த விசேஷம் உண்டா ?"

**விசாலம்**—"வைத்யேச்வரர், பாதாளேச்வரர், ஸைகதேச்வரர் இம் மூன்று தேவாலாயங்களும் ஒன்றுக்கொன்று சமீபத்திலேயே கட்டப்பட்டிருக்கின்றன. அர்க்கேச்வரர் தேவஸ்தானம் தலக்காடிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்திலிருக்கும் விஜயபுரம் என்ற கிராமத்தில் இருக்கிறது. மல்லிகார்ஜுனேச்வரர் கோவில் தலக்காடிலிருந்து ஐந்தாறு மைல்கள் தூரத்தில் ஸோமகிரி என்ற குன்றின்மேல் இருக்கிறது. இந்தக் கோவில் ஒரு வெண்மை நிறமான கட்டிடம். குன்றின் அடிவாரத்திலிருந்து குன்றையும் அதன் மேலிருக்கும் கோவிலையும் பார்ப்பதற்கு வெகு அழகான காக்ஷியாக இருக்கிறது. குன்றின் மேல் நின்றுகொண்டு பார்ப்பதற்கு சுற்றுவட்ட கிராமக் காக்ஷியும் நதியின் அமைப்பும் வெகு ரம்யமாக இருக்கிறது. வைத்யேச்வரர் கோவில் பெரியதாக திராவிட முறையில் கட்டப்பட்டு வெகு நேர்த்தியாக சிற்ப வேலைப்பாடுகளுடன் துலங்குகிறது. இங்கு கல்லினால் செய்யப்பட்ட பத்து அடி உயரமுள்ள துவார பாலகர்களின் சிலைகள் இருக்கின்றன. இந்தக் கோவில் அம்பாளுக்கு மனோன்மணித் தாயார் என்று பெயர். மல்லிகார்ஜுனேச்வரரின் ஆலயமும் நன்றாக வேலைத் திறமையுடனேயே கட்டப்பட்டிருக்கிறது. மற்ற மூன்று கோவில்களும் சிறியதாகவும் சாதாரணமாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த பஞ்ச லிங்கங்களின் கோவில்களைத் தவிர இன்னும் அநேக கோவில்கள் இந்த ஊரில் இருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை கீர்த்தி நாராயணன் கோவிலும் வீரபத்திரன் கோவிலும் கோகர்ணேச்வரர் கோவிலும். தலா, காடா, என்ற இரு வேடர்களின் சிலாபிம்பங்களும் வீரபத்திர ஸ்வாமி கோவிலின் வாசல் முன்பு வைக்கப்பட்டிருக்கின்றன. பாக்கி சுமார் முப்பது கோவில்கள் மணலின்கீழ் புதைந்து கிடைப்பதாகச் சொல்கிறார்கள். இங்கு விசேஷமான தீர்த்தம், காவேரி நதியைத் தவிர "கோகர்ணம்" என்ற தடாகம்தான். எப்பேர்ப்பட்ட கொடிய கர்ம வியாதியை உடையவர்களானாலும், அவர்கள் இந்த தீர்த்தத்தில் ஸ்னானம் செய்தால் நோய் நீங்கி சுக சரீரிகளாவார்களென்று ஸ்தல மஹாத்மியம் கூறுகிறது. இந்த மணல் நிலத்தின்மேல் நடந்து தேவாலயங்களை எல்லாம் சுற்றிப் பார்த்து தரிசனம் செய்துவர எங்கள் கால்களுக்கு அந்த ஸர்வேச்வரனே சக்தி அளித்தாரென்று சொல்லவேண்டும். பஞ்சலிங்க தரிசனம் செய்கிறோமென்ற பரவசத்தில் எங்கள் ஒருவருக்கும் கால்வலியோ சிரமமோ தெரியவே இல்லை. வேறு ஒரு சமயமாக இருந்தால் இந்த மணல் நிலத்தின்மேல் பத்தடிகள்கூட கஷ்டப்படாமல் நடந்திருக்க முடியாது. இன்னொரு அதிசயம் சொல்ல மறந்துவிட்டேன். பாதாளேச்வரன் என்ற லிங்கம் காலையில் சிகப்பு நிறமாயும், மத்தியானத்தில் கருப்பு வர்ணமாயும் மாலையில் நல்ல வெண்மை நிறமாயும் தென்படுவதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவ்விதமே நாங்கள் மத்தியானத்தில் பார்த்தபொழுது கருப்பு நிறமாயும், மாலை பார்த்தபொழுது வெண் நிறமாயும் புலப்பட்டது. காலையில் கூட்டம் அதிகமாக இருந்தபடியால் எங்களுக்கு சிவலிங்கம் இருந்த இடமே தெரியவில்லை."

**லலிதா**—"ஆமாம், இந்த ஊரில் மணல் வந்து இப்படி மேன்மேல் சேர்வதற்கு ஏதோ சாபம்தான் காரணம் என்று சொல்கிறார்களே ! அதென்ன ?"

**விசாலம்**—"அதுவா? சொல்கிறேன். அந்தக் கதையையும். வெகுகாலத்திற்கு முன்பு

விஜயநகரத்தின் அதிகாரி ஒருவனின் மனைவி அலமேலு அம்மாள் என்பவள். அந்த காலத்தில் மைசூர் தேசத்தை ஆண்டுவந்த ராஜ ஒடையர் என்ற அரசன்மேல் ஏதோ காரணத்தினால் கோபம்கொண்டு, மூன்று சாபங்களைக் கொடுத்துவிட்டு காவேரி நதியில் விழுந்து மடிந்தாளாம். அந்தச் சாபங்களில் ஒன்று "தலக்காடு மணலாகக் கடவது" என்பதாம். அலமேலு அம்மாளின் சாபத்தினால்தான் இப்படி தலக்காடு மணலுக்கிரையாகிறது என்பது ஜனங்களின் அபிப்ராயம். ஆனால் ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்தபடி உண்மையான காரணங்கள் இரண்டு இருக்கின்றன. முதலாவது, இந்த இடத்தில் காவேரி நதி வளைந்துகொண்டு திரும்பி மறுபடியும் தான்வந்த திசைக்கே பாயும்பொழுது மணலை ஏராளமாய் தள்ளிக்கொண்டு வந்து சேர்க்கிறதாம். இரண்டாவது இந்த இடத்தில் விசேஷமாய் காற்று மேற்கிலிருந்தே வீசுவதால் மணலை குவியல் குவியலாய் மேல் மேல் அடித்துத் தள்ளுகிறது. இவ்விதமாய் இந்த மணல் தொந்திரவினால் பழைய தலக்காடு சிறுகச் சிறுக மணலுக்கடியில் புதைக்கப்பட்டு, இப்பொழுது ஒரு மைல் நீளத்திற்கு அதிகமாக மணலில் மறைந்திருக்கிறதாம். இவ்விதம் மணல் மேன்மேலும் சேராமலிருப்பதைக் குறைக்க மைசூர் சர்க்கார் அநேக முறைகளைக் கையாண்டு வருகிறார்களாம். இந்த பஞ்சலிங்க தரிசன உத்ஸவத்தின்பொருட்டு ஆயிரக்கணக்கான வேலை ஆட்களைக்கொண்டு முக்கியமான சில தேவஸ்தானங்களை மணலுக்கடியிலிருந்து வெளிப்படுத்தி சுத்தம் செய்து வைக்கிறார்களாம். ஆனால் மறுபடியும் சில தினங்கள் இவைகள் மணலினால் மூடப்படுகிறதாம். ஆனால் வைத்யேச்வரர் தேவஸ்தானம் மாத்திரம் ஒருபொழுதும் மணலினால் மூடப்படுவதில்லையாம். இந்த ஊருக்கு சிறிது தூரத்தில் புதிதாக இன்னொரு ஊர் ஏற்படுத்திக்கொண்டு அங்கு சில ஜனங்கள் வசித்துவருகிறார்கள். இதற்கு புதிய தலக்காடு என்று பெயர்.

"பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கங்கைகொண்ட சோழனுக்கு தலக்காடு சொந்தமாக இருந்தபொழுது அவன் அதற்கு ராஜ ராஜபுரம் என்று பெயரிட்டிருந்ததாக சரித்திரத்திலிருந்து தெரிகிறது. பஞ்சலிங்க தரிசன மகோத்ஸவத்தை முன்னிட்டு மைசூர் சர்க்கார் யாத்ரீகர்களுக்கு அனேக வசதிகளைச் செய்து கொடுத்திருந்தது எல்லோருக்கும் வெகு அனுகூலமாக இருந்தது. சாரணச் சிறுவர்களும் போலீஸ் படைகளும் தேவையான உதவியைச் செய்யத் தயாராக இருந்தார்கள். ஆனால் ஊர் தான் சிறியது; ஜனத் திரளோ ஏராளம்! வெகு தூரதேசத்திலிருந்தெல்லாங்கூட வந்திருந்தார்களாம். இவ்வளவு கூட்டத்தில் சிலருக்குத் தரிசனம் கிடைத்திருக்குமோ என்பதுகூடச் சந்தேகம்தான். மொத்தத்தில் தரிசனம் என்னமோ "திவ்ய தரிசன"மாகத்தான் இருந்தது. எனக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைத்தது பூர்வஜன்ம புண்யந்தான். வைத்யேச்வரர், அர்க்கேச்வரர், பாதாளேச்வரர், ஸைகதேச்வரர், மல்லிகார்ஜுனேச்வரர் இவை ஐந்தும் முறையே, ஈசான, தத்ரூப, அகோர, ஸத்யோஜாத, நாமதேவ என்ற ஸாக்ஷாத் பரமேச்வரனின் ஐந்து முகங்கள் என்றும், இவைகளை உண்மை பக்தியுடன் பூஜிப்பவர்கள் ஈச்வரன் அருளை பரிபூரணமாய்ப் பெறுவார்கள் என்றும் ஒரு புஸ்தகத்தில் எழுதியிருந்தது. மேலும், தலக்காடுக்குச் சென்று பஞ்சலிங்க தரிசனம் செய்ய முடியாமல் போனவர்கள் இந்த மகோத்ஸவத்தைப்பற்றி புஸ்தகங்களிலிருந்து படிப்பதினாலோ அல்லது பிறர் சொல்லிக் கேட்பதினாலோ கூட பஞ்சலிங்க தரிசனம் செய்த பலனை அடையலாமென்றும் அந்த புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது. இவ்வளவுதானம்மா, எனக்குத் தெரிந்த "தலக்காடு புராணம்."

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# சௌக்கியமா?

(ஸ்ரீ கே. வெங்கடராமன். பி. ஏ.)

"நீங்கள் எவ்வாறு உயிருடனிருக்கி றீர்கள்?" அல்லது "நீங்கள் உயிருட னிருக்கிறீர்களா?" என்று உம்மை ஒரு வர், முதல் தடவை பார்க்கும்பொழுது கேட்பாரேயாகில், நீர் உம்முடைய முப் பத்திரண்டு பற்களையும் காட்டிக்கொண்டு, சும்மா போவீர்களா? கொட்டாப்புளி போல் எதிரில் நின்றுகொண்டிருக்கும் பொழுது, இப்படி கேட்டால், உம்முடைய இரத்தம் (தேசிய இரத்தமாயிருந்தாலும் சரி, உணர்ச்சி அற்ற இரத்தமாயிருந் தாலும் சரி) கொதிக்க ஆரம்பித்து விடாதா? ஆனல் நான் சொல்லப் போவ தைக் கேட்டு, உங்கள் உயிரை விட்டு விடாதீர்கள்!

மேற்சொன்னவாறு கேட்டால், பல்லை இளித்துக்கொண்டு, "ஆம், உயிருடன் தான் இருக்கிறேன்" என்று பதிலளிக்கும் ஆத்மாக்களும் இப்புவியில் உண்டு. இவ் வாருன கேள்வி கேட்பதும், பதிலளிப் பதும் ருஷ்யா பிரதேசத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்கும்பொழுது அவரவர் க்ஷேம விசாரிப்பின் போது.

நம் பரதநாட்டிலும், க்ஷேம விசாரிப்பு பலவிதமாயிருக்கிறது. நம்மிடையில், ஒரு வரை ஒருவர் சந்திக்கும்பொழுது, "ஏது, ரொம்ப நாளேச்சே பார்த்து, சௌக் கியமா?", "நமஸ்காரம். க்ஷேமந்தானே," "அடாடா, ஊரிலே இல்லேபோலிருக்கு, எப்போ வந்தீங்க", "அண்ணு, வரணும், நமஸ்காரம்," "ஏது, ரொம்ப இளைச்சிருக் கிரே" (ஆசாமி உண்மையில் அதிகமாகப் பெருத்திருக்கக்கூடும்!) என்று பலவித மாக க்ஷேம சமாசாரங்கள் விசாரிக்கப்படு கின்றன. மிகுதியாக ஆங்கிலேயர்கள் இறக்குமதியாக்கப்பட்ட நம் நாட்டில், ஆங்கிலேயருடைய பழக்கமும் நம்மிடை யில் மிகுதியாகப் பரவி இருக்கின்றது. "காலை வந்தனம் (Good morning) உங்களுடைய தேகநிலை (Health) எப்படி இருக்கிறது" அல்லது, "எப்படி இருக் கிறீர்கள்" என்பதேயாகும்.

வடக்கே சென்றல், வங்காளத்தில் ஒரு வர் மற்றொருவரை சந்திக்கும்பொழுது "ராம், ராம்" என்கிருர்கள். நம் முஸ்லீம் சகோதரர்கள், "ஸலாம் மாலேகும்" என்று தம் கைகளைத் தரைவரையில் கொண்டுபோய் வணங்குகிருர்கள்.

முசோலினி உறுமும் நாடாகிய இத் தாலியில், "நீங்கள் எவ்வாறு நின்றுகொண் டிருக்கிறீர்கள்?" என்று சொல்லுகிருர்க ளாம். எப்படி நின்று கொண்டிருந்தா லென்ன? தலைகீழாக ஒரு ஆத்மா நின்று கொண்டிருந்தாலல்லவா இம்மாதிரி கேட்க வேண்டும்? சரி. நமக்கென்ன? முசோலினி ஞாபகம் வந்தவுடன் அவருடைய அண்ணு வான (தம்பியாக வைத்துக்கொண்டாலும் சரி. அதற்காக அவர்கள் சண்டைக்கு வரப்போவதில்லை) ஹிட்லரின் ஞாபகம் உடனே வருகிறதல்லவா?

அந்த ஜெர்மனி நாட்டில், 'உங்களைப் பற்றி, உங்களுக்கு என்ன அபிப்பிராயம் தோன்றுகிறது?" என்று கேட்கிருர்க ளாம். என்ன சங்கடமான கேள்வி? கேள் விற்குப் பதில் வந்ததும், ஒருவேளை ஹிட் லர் உம்மைச் சுட்டே தீர்த்துவிடலாம், அல்லது தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு, ஒரு சேனுபதி உத்தியோகம் கொடுக்கலாம். இவ்வளவும நீங்கள் ஒரு யூதனுகவாவது அல்லது யூதர்களை ஆதரிப் பவனுகவாவது இல்லாமலிருந்தால்தான்!

இந்த வெடிகுண்டு ராஜாங்கங்களை விட்டு விட்டு சமாதானத்தை விரும்பும் நாடாகிய பிரெஞ்சு நாட்டிற்குச் சென்றல், அங்கே "உம்மை எவ்வாறு தூக்கிச் செல்லுகிறீர் கள்?" என்று கேட்கிருர்களாம். என்ன அசம்பாவிதமான கேள்வி! நம்மைத் தூக் கிச் செல்லும் கால்களை அல்லவா கேட்க வேண்டும்!

இப்படியாக க்ஷேம விசாரிப்பு, நாட் டிற்கு நாடு வித்தியாசமாக இருக்கிறது.

சிறு கதை

# பெண் மனம்

(ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்)

"எதற்காக இன்னும் சாய்ந்து கொண்டிருக்கிறீர்கள்? எழுந்து சாப்பிட வரப்படாதோ?" என்று கனகம் நடராஜனைச் சொன்னாளே ஒழிய தானும் வெகுநேரம், ஜானகி போன பின்பு, ஏதோ யோசனை செய்து கொண்டே படுத்துக் கொண்டிருந்தாள்.

பொழுது போனது இருவர்களுக்குமே தெரியவில்லை.

நடராஜன் கனகத்திற்குப் பதில் சொல்லாமல் தன் மனதில் இருந்த எண்ணங்களின் தொடர்ச்சியாக ஒரு கேள்வி கேட்டான்.

"உன் தோழியை இங்கேயே சாப்பிடச் சொல்லுகிறது தானே? மத்தியானம் வந்தவள் இனிமேல் போய் தானே சமையல் செய்ய வேண்டும், பாவம்."

"அவள் சாப்பிட்டு விட்டால்? அவள் அகமுடையான் என்ன ஆகிறது?"

"ஓ—மறந்து விட்டேன். ஆனல்—அவரும்—"

"அவரை மறந்து விட்டேளா? ரொம்ப அழகா யிருக்கே? ஜானகி என்ன கலியாணம் ஆகாதவள் என்று நினைத்தீர்களா?"

"இல்லே—"

"என்ன இல்லே? ஏதாவது புத்தி குழம்பி விட்டதோ?" என்று கேலியில் இறங்கி தன் மனதிலிருந்த வேதனையை அகற்ற முயன்றாள் கனகம்.

"உன் தோழிக்கு என்ன வயசு?" என்று மறுபடியும் நடராஜன் தன் எண்ணங்களைத் தொடர்ந்தே கேட்டான்.

"இதென்ன கேள்வி? என் தோழி என்பவள் என்ன கிழவியாக இருப்பளா? அவளுக்கும் என் வயதுதான் இருக்கும்."

"உன்னைக் காட்டிலும் உயரமாக இருக்கிறாள்."

"அதற்கென்ன, அவர்கள் வீட்டில் எல்லோரும் உயரம்."

"உயரம் என்றாலும் பொருத்தமாக இருக்க வேண்டாமா?"

கனகத்திற்குக் கொஞ்சம் எரிச்சல் வந்தது.

"அதைப்பற்றி என்ன தர்க்கம் இப்பொழுது? எழுந்திருங்கள் சாப்பிட. எனக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது" என்று கனகம் எழுந்து சமையலறைக்கு போகத் தயாரானாள்.

"அவள் புருஷனுக்கு என்ன வேலே?"

"கஸ்டம் ஆபீஸிலாம்!"

"என்ன சம்பளம்?"

"நாற்பது ரூபாயாம்!"

"பட்டணத்தில் நாற்பது ரூபாயில் பாவம் எப்படிக் காலட்சேபம் செய்கிறார்களோ!"

"அகமுடையான் பெண்சாதி இரண்டு பேர் தானே? செய்யாமல் என்ன பிரமாதம்? மிச்சம் கூடப் பிடித்து விடலாம். அதுவும் நம்மைப் போல, ஒரு சினிமா, ஒரு வேடிக்கை, வினோதம்—ஒன்றுக்கும் போகாமல் இருந்தால் என்ன செலவு?"

இந்தப் பாணம்கூட அவன் காதில் ஏறவில்லை.

"பாவம், பேச வேண்டுமென்று திருவல்லிக்கேணியிலிருந்து வந்திருக்கிறாள். இங்கேயே சாப்பிடச் சொல்லி இருக்கலாம்" என்றான் மறுபடியும்.

"சாப்பிட இருக்க மாட்டேன் என்று விட்டாள்" என்று கனகம் அழுத்தமாகச் சொன்னாள்.

"இருக்கச் சொன்னயோ?"

"நன்றாயிருக்கிறது நீங்கள் பேசுகிறது! மெனக்கெட்டு ஆத்துக்கு வந்தவர்களை சாப்பிடச் சொல்லாமல் தான் இருப்பார்களாக்கும். என்னமோ—"

"இல்லே—"

"சரி, சாப்பிட வாருங்கள். பிறகு இல்லே—இல்லே—என்று இழுத்துக் கொண்டே இருக்கலாம். வெறுமனே எழுதி எழுதி மூளை கலங்கிப் போய் விட்டது. இனிமேல் பைத்தியம் பிடிக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி."

கனகம் இலை போட்டுப் பரிமாறினுள். நடராஜன் இலையில் சாதம் விழுவதற்கு முன்பே "போதும், போதும்!" என்று கை அமர்த்தினுன்.

"இதென்ன!—"

"ஓகோ, சாதம் போடவே இல்லையா?"

"எங்கே ஞாபகம்?"

இந்தக் கேள்வியைத் தான் கேட்ட பிறகுதான் கனகத்திற்கே மனதில் ஏதோ தட்டிற்று. அந்தக் கேள்வி காதில் பட்டவுடன் நடராஜனும் சட்டென்று தலையைத் தூக்கி கனகத்தின் முகத்தைக் கவனித்தான்.

ஆனுல் தான் பயந்தது போல அவள் முகத்தில் ஒரு குறியும் தென்படவில்லை. மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தான். கனகம் பரிமாறிக்கொண்டிருக்கும்பொழுதே அவன் மெய்ம்மறதியை கவனித்தாள்.

"நாளைக்கு அவளை இங்கே சாப்பிட வரச்சொல்லி இருக்கிறேன்" என்ருள் அவனுடைய முகத்தை உற்றுக் கவனித்துக்கொண்டே.

நடராஜன் முகம் உடனே மலர்ந்ததைக் கண்டாள். அவள் உள்ளத்தில் சுரீர் என்று குத்தினதுபோன்ற ஒரு வேதனை உண்டாயிற்று. அதை எப்படியோ முகத்தில் தென்படாமல் மறைத்துக்கொண்டாள்.

"அவள் புருஷனையும் கூட்டிக்கொண்டு வரச்சொல்லி இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு கனகம் மறுபடியும் அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்—தன் வார்த்தைகளால் அவன் முகம் எப்படி மாறுகிறது என்பதைக் கவனிக்க.

அவன் முகம் சட்டென்று சிறுத்தது. சிறிது அசடுகூடத் தட்டிற்று. அதை அவனுல் மறைக்க முடியவில்லை. மனைவியின் முகத்தைப் பார்த்தான்—அவள் கவனித்துவிட்டாளா என்று அறிய. ஆனுல் அதை அவள் முன்பே ஊகித்து தலையைத் திருப்பிக்கொண்டு வேறு ஏதோ கவனமாய் இருப்பதுபோல் இருந்தாள். தனது ஊகம் சரி என்றதால் ஏற்பட்ட ஒரு திருப்தியும் அதனுலேயே ஒரு வேதனையும் ஒரே சமயத்தில் அவள் உள்ளத்தில் எழுந்தன.

"நாளைக்கென்ன, ஆபீஸ் லீவு கிடையாதே?" என்று நடராஜன் சொன்னது அவள் காதில் படவில்லை.

"அவள் அகத்துக்காரர் ரொம்ப நல்லவர் என்கிருள்...போகிறது. ஜானகி ரொம்ப கெட்டிக்காரி, இங்கிதம்—"

"அழகுக்குத்தான் என்ன?"

"கொடுத்துவைத்தவள். அனுபவிக்கிருள்" என்று சொல்லிவிட்டு கனகம் திடீரென்று மௌனம் ஆனுள்.

அன்று ஜானகி வந்ததுமுதலே நடராஜன் வெறிகொண்டுவிட்டதைக் கனகம் அறிந்துகொண்டாள். தோழிகள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அடிக்கடி ஏதோ சாக்கு வைத்துக் கொண்டு அவர்கள் உட்கார்ந்துகொண்டிருந்த அறைப்பக்கம் வந்தான். கனகத்திற்கு வெட்கம் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போலிருந்தது. தன் தோழி அதை அறிந்துவிடக்கூடாதென்று வெகு கவனமாக இருந்தாள். அவன் பாதி தூரம் வருவதற்குள் தான் எதிர்கொண்டு எழுந்துபோய் என்னவென்று கேட்டு விட்டு வந்தாள். அப்பொழுதும் அவன் தலையை உள்பக்கம் திருப்பி ஜானகியைத் திருட்டுப் பார்வை பார்த்தான். ஜானகி அதைக் கவனிக்கவில்லையென்று கண்டு கனகம் கொஞ்சம் ஆறுதல் அடைந்தாள்.

அவளைச் சாப்பிடச் சொல்ல வேண்டுமென்று கனகத்திற்கு உள்ளூர ஆசை. ஆனுல் தன் புருஷன் அதற்குள் ஏதாவது அசட்டுத்தனமாக நடந்துகொண்டுவிட்டால் என்ன செய்கிறது என்ற பயம் மேலிட்டது. ஜானகி என்ன நினைப்பாள்? அவனைப்பற்றி எப்படியாவது நினைத்துவிட்டுப் போனுல் போகட்டும்—தன்னைப்பற்றி என்ன நினைப்பாள்?

அத்துடன்கூட மற்ருெரு வேதனையும் கூடவே எழுந்தது கனகத்தின் மனதில். ஜானகி மிகவும் அழகாக இருந்தாள் என்பது என்னமோ வாஸ்தவம்தான். தான்கூட அவ்வளவு அழகு இல்லை. ஆனுலும்—அதனுல்தான்—கனகத்தின் மனதில் உள்ளத்தைக் கிளறிய அசூயை உண்டாயிற்று. தன் புருஷன் ஒவ்வொரு தடவையும் ஜானகியைப் பார்க்கும் பொழுதும் கனகத்தின் ஹிருதயத்தில்

அடித்தாற்போல இருந்தது. அப்படியே நெஞ்சைப் பிடித்து சமாதானம் செய்து கொண்டாள்.

நடராஜன் சாப்பிட்டு விட்டு எழுந்து போனான். கனகம் சாதம் முதலியவற்றை எடுத்து இலையருகில் வைத்துக்கொண்டு இலையில் உட்கார்ந்து கொண்டாள். அவளுக்குச் சாதம் இறங்கவில்லை. துக்கம் நெஞ்சை அடைத்தது. அழுதாள். மிருகப்பிராயமான அந்த அசூயை உணர்ச்சி அவளை உலுக்கி எடுத்தது.

தன் புருஷன் நெருங்கி இவ்வளவு பழகின பிறகு, தன்னிடம் இருந்த அழகை அறியாமல், முதல் முதலாகப் பார்த்த ஜானகியைக் கண்டு மனதைப் பறிகொடுத்து விட்டது அவளுக்குத் தாங்க முடியவில்லை. ஆனால் ஜானகியையோ ஜானகியின் அழகையோ அவள் குற்றம் கண்டு பிடிக்கவில்லை. தன் புருஷனுடைய அலட்சியத்தைக் கண்டுதான் அப்படிக் கலங்கினாள். தன்னெதிரில், தான் என்ன நினைத்துக் கொள்ளக் கூடும் என்பதைக்கூட கவனியாமல் அவளைப் பார்த்துப் பார்த்து ஏங்கினான். அவள் அழகாக இருக்கிறாள் என்று தன்னிடமே சொன்னான்—என்னடா இப்படிச் சொல்லுகிறோமே என்பதைக்கூடக் கவனிக்காமல்.

அரைமணி நேரம் அப்படியே இலையடியில் உட்கார்ந்து போய் விட்டாள். அடுத்த நாள் சாப்பிடக் கூப்பிட்டிருப்பதாகச் சொல்லி நடராஜனின் மனப்போக்கை இன்னும் நன்றாகத் தெரிந்து கொண்டது ஒருபுறம் அவளுக்கு வருத்தமாக இருந்தது என்றாலும் மற்றொருபுறம் அவனுக்கு அளிக்கப்போகும் ஏமாற்றத்தை நினைத்து கொஞ்சம் சந்தோஷமடைந்தாள்.

நடராஜன் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவள் வராததைக் கண்டு அவள் சாப்பிடும் இடத்திற்கு வந்தான். அவள் இலையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அதைப்பற்றி ஒன்றுமே கேட்கவில்லை.

"எப்பொழுது வருகிறார்கள் நாளைக்கு?" என்றான்.

கனகம் கண்களைத் துடைத்துக்கொண்டு தலை நிமிர்ந்தாள்.

"ஏன்?" என்றாள் குரலில் ஆழ்ந்த அர்த்தத்தை ஏற்றி.

நடராஜன் அலறிப் போனான்.

"இல்லை—எப்பொழுது வருகிறார்கள் என்று கேட்டேன்" என்று மழுப்பினான்.

"அவள் வரமாட்டேன் என்று சொல்லி விட்டாள்."

"ஏன்?" என்று நடராஜன் கேட்டபொழுது அவன் குரலில் இருந்த ஏமாற்றத்தைக் கண்டு கனகம் கோபமும் சந்தோஷமும் ஏககாலத்தில் அடைந்தாள்.

"நீங்கள் இல்லாவிட்டால் வந்திருப்பாள்."

"என்ன? ஏன்?" என்று நடராஜன் திகிலடைந்து கேட்டான்.


"ஆமாம். நீங்கள் அசட்டுப் பிசட்டு என்று பார்த்தது அவளுக்கு மனதிற்கு சமாதானமாக இல்லை. என்னிடம் கேட்டே விட்டாள். 'என்னடி கனகம்? உன் ஆம்படையான் அப்படி வெறிச்சி வெறிச்சிப் பார்க்கிறார்?' என்று கேட்டாள்."

நடராஜன் வெலவெலத்துப் போனான். அந்த இடத்தில் நிற்பதே அவனுக்கு அசாத்தியமாகி விட்டது. மௌனமாக ஒன்றும் பதில்சொல்ல வாய் வராமல் தன் அறைக்குச் சென்றான்.

கனகம் ஒருவாறு ஆறுதலடைந்ததால் மனதில் ஒரு திருப்தி ஏற்பட்டது. கொஞ்சம் நிம்மதியுடன் சாப்பிட்டுவிட்டு கைக்காரியத்தைச் செய்தாள். அப்பொழுது பழிதீர்த்துக் கொண்டதுபோல அவளுக்கு ஒரு உத்சாகம் கூட ஏற்பட்டது. பால் பாத்திரத்தையும் வெற்றிலைத் தட்டையும் எடுத்துக்கொண்டு படுக்கையறைக்குப் போனாள். நடராஜன் அவள் முகத்தைப்பார்க்க வெட்கினவனாய் தூங்குவதுபோல் பாசாங்கு செய்துகொண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

கனகம் அவனை எழுப்ப முயலவில்லை.

திடீரென்று அவள் மனது இளகிற்று. அவனை அதற்குமேல் அவமானத்திற்குள்ளாக்க அவளுக்கு மனம் வரவில்லை.




## 1

## அரும்புகள்

கண்டிராக்டர் லம்போதர முதலியார். கொழுத்த பணக்காரர். குத்தகை எடுத்து எடுத்து லட்சக்கணக்காகப் பணம் குவித்துவிட்டார். எத்தனையோ தானமும் தர்மமும் செய்கிறார். ஆனால் ஊரார் அவரை "வெற்றிலை முதலியார்" என்றுதான் சொல்வது வழக்கம்.

அவர் சென்னைக்கு முதலில் வந்தபொழுது வெற்றிலை வாழையிலை முதலியவைகளை அயலூர்களிலிருந்து வரவழைத்தும், ஏலத்தில் எடுத்தும் விற்று வந்தார். பிறகு படிப்படியாய், வீடு, கட்டடங்கள், அரசாங்கத் தொழிற்சாலைகள், முதலியவைகளைக் குத்தகை பிடித்து மிகுந்த செல்வந்தராகிவிட்டார்.

லம்போதர முதலியார் என்றால் சென்னையில் எல்லாருக்கும் தெரியும். "பணமிருந்தால் பத்தும் வரும். அண்ணி மட்டும் இருந்து ஆளக் கொடுத்துவைக்கவில்லை. இந்த வருஷம் 'ராஜா ஸர்' பட்டம் கூடவரப் போகிறதாமே?" என்று அண்டை வீட்டுப் பாப்பாத்தியம்மாள் பெருமூச்செறிவாள்.

அவள் மனதுள் பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாய் எழும். ஒரு காலத்தில், பாப்பாவை லம்போதர முதலியாருக்கே கொடுப்பதாய் நிச்சயித்திருந்தது. ஆனால் அவள் தாயார் "வெற்றிலை விக்கிற பயலுக்கு என் மகளைக் கட்டவா? என்று கூறிவிட்டாள். பாப்பா பாவம் என்னென்னமோ செய்து பார்த்தாள். ஒன்றும் சாயவில்லை. கடைசியில்ஜமீன்தார் மகனான ஒரு மூடனுக்குப் பலியானாள் பாப்பா.

பாப்பா தங்கமான பெண். குடும்பத்துக் கேற்றவள். மாமி நாத்தி முதலியவர்களால், சார்ந்தார்க்குச் சந்தனம், மூகார்ந்தார்க்குத் தாழம்பூ என்று புகழப்பட்டாள். ஆனால் என்ன ? அவள் கணவன் புண்யகோடி முதலி பெருங்குடியன், மூன்று நான்கு வருஷங்களுக்குள், லட்ச ரூபாய் பெறுமானமுள்ள எல்லம்பாடி ஜமீன், ஆரணி ஜாகீர்தாரிடம் அடமானம் வைத்து மூழ்கிப் போயிற்று.

புக்ககம் போனபொழுது ஜமீன்தாரிணியா யிருந்த பாப்பா 3 வருஷங்களுக்குள், எல்லாவற்றையும் இழந்து குழந்தைகளுடன் பிறந்தகம் திரும்பினாள். துயரங்களுக்கெல்லாம் சிகரம்போல், அவள் கணவன் புண்ணியகோடியும் குடி மிகுதியினால் ஈரல் வீங்கி ஒரே தூக்கமாய்த் தூங்கிவிட்டான்.

லம்போதர முதலியார் பாப்பாவின் விஷயத்தில் நிரம்பவும் பரிதாபப்பட்டார். ஆனால் அவளுக்குச் சிறு உதவிகள் செய்யக்கூடக் கூசினார். ஊரார் தாறுமாறாக அவள் பெயரைக் களங்கப்படுத்திவாரார்களோ, என்ற பயம். மனைவியை இழந்த தன்னைக் குறை கூறினாலும் குற்றமில்லை. பேதையான அவளை ஏதாவது சொல்லிவிட்டால், என்று எண்ணும் பொழுதெல்லாம் அவர் மனம் சலிக்கும். இதனால் மற்றவர்களிடம் காண்பிக்கும் அவ்வளவு பரிவு கூட அவர் பாப்பாவிடத்திலும் அவள் குழந்தைகளிடத்திலும் காண்பிக்கவில்லை.

பாப்பாவின் மகன் சிவக்கொழுந்துக்கு வயது பதினைந்து முடிந்திருந்தது. ஊரிலே, ஒரு டாக்கிக் கொட்டகை குதிரைப் பந்தயம் பாக்கிவிடாமல் சுற்றிக்

கொண்டிருந்தான். ஜமீன்தார் மகன் மேஜர் ஆனபிறகு வசூலித்து விடலாமென்று இரகசியமாய் கடன் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் மார்வாடிகள்.

மற்ற சிறு குழந்தைகளுக்கு வயது, எட்டும், ஆறும் ஆகியிருந்தது. அந்த ஜாகீர்தார் கருணையினுல் ஏதோ ஏற்பாடு செய்து, மாதம் நாற்பது ரூபாய் கொடுத்து வந்தார். சிவக்கொழுந்து வரவர மிகவும் மோசமாய் நடந்துகொள்ள ஆரம்பித்தான். வீட்டிலிருந்த வெள்ளிப் பாத்திரங்களும் நகைகளும் ஒவ்வொன்ருய் வெளியே செல்ல ஆரம்பித்தன.

"இந்தச் சள்ளைகளெல்லாம், லம்போதரன் மனம் வைத்தால் ஒரு நொடியில் எவ்வளவோ சீராய்விடும். ஊருக்கெல்லாம் உபகாரி. என்பாவம்! என் விஷயத்தை மட்டும் காதிலே கூடப் போட்டுக்கொள்ளுகிறதில்லை" என்று மனம் புழுங்குவாள் பாப்பா.

லம்போதர முதலியார் தன் தாயாரையும், தன் மருமகள் தாயற்ற புனிதவதியையும் பாப்பாவுக்கு ஏதாவது உதவி செய்யும்படி கூறுவார். "ஐயோ பாவம்! நீயும் தான் அந்தப் பையனைக் கொஞ்சம் பார்த்து ஏதாவது சொல்லக் கூடாதா? பாவம், அவள் என்ன செய்வாள்? நான் சொன்னல் அந்த பிசாசு கேட்குமா? கிழவன் பேச்சைக் கிண்ணரக்காரன் கேட்பானு?" என்று சொல்லுவாள் தேவானையம்மாள். புனிதத்திற்குப் பாப்பாவிடம் வெகு பிரியம். புனிதமும் சிவக்கொழுந்தும் ஏறக்குறைய ஒரே வயதினர். பாப்பாவும் புனிதத்தின் தாய் செல்வமும் இணைபிரியாம லிருந்தவர்கள். இதனுல் பாப்பா புனிதத்தைத் தன் மகனைவிட பன்மடங்கு அதிகமாய் பாவித்தாள். புனிதத்திற்கும் நாளைக்கு ஒரு முறையாவது பாப்பாவைப் பார்க்காவிட்டால் தூக்கம் வராது.

பாவம், தேவானையம்மாளுக்குத் தள்ளாத காலத்தில் ஒரே சமயத்தில், மகளையும் மருமகளையும் இழந்து, தாயற்ற குழந்தைகளையும் வளர்ப்பதென்ருல் சுலபமா? புனிதவதி மிகவும் சிறு குழந்தை. தணிகைவேலன் அவளைவிட மூத்தவன் தான். ஆனுலும் இளமை முதலே ஒன்ருய் உண்டு உடுத்து வளர்ந்தவர்களாகையால், காண்போர், இருவரும் ஒரு தாயின் குழந்தைகளே என்று எண்ணுவார்கள்.

பள்ளிக்கூடம் போகும்போதும், வரும்போதும், விளையாடும்போதும் எப்பொழுதும் தணிகைவேலனும், புனிதமும் ஒன்ருகவே தான் இருப்பார்கள். ஒவ்வொரு தடவையும்,தேவானையம்மாள், சரி, இருவருக்கும் வயதுவந்தபின் கலியாணம் செய்துவிடலாம் என்று எண்ணுவாள். ஆனுல் மறு விநாடி, "இரண்டும் தாயற்றதுகள், நான் என்ன கற்பகோடி காலம் சாசுவதமாயிருக்கப் போகிறேன்? எங்கேயாவது நல்ல பெரிய குடும்பத்தில் கொடுத்தால், ஆண் பெண் ஒத்தாசைக்குக் கஷ்டமில்லாமல் இருக்கும். இங்கே ஏனென்று கேட்பாரில்லை" என்று எண்ணுவாள்.

## 2

## மனநெகிழ்ச்சி

அப்பொழுது புனிதத்திற்கு வயது பதினறு. சென்னையில் மேரி ஆசியார் கலாசாலையில் இன்டர்மிடியேட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். தணிகைவேலன் ராஜதானிக் கல்லூரியில் பீ. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்.

தேவானையம்மாள் சீக்கிரமாக புனிதத்திற்குக் கலியாணம் செய்துவிட விரும்பினுள். ஆனுல் அவள் தகப்பனுடைய உயிலின்படி (மரண சாசனத்தின்படி) அவள் விருப்பமான பொழுது இஷ்டமானவரைக் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று அவளுக்கு உரிமை இருந்தது. ஆகவே அவளை தானே கேட்கவோ தடுக்கவோ தனக்கு உரிமையில்லை யென்று சொல்லி விட்டார் முதலியார்.

ஆனுல், இந்த விஷயமாய் தனிமையில் அவர் தேவானையம்மாளிடமும் தணிகைவேலனிடமும் கூடக் கேட்டதுண்டு. தணிகைவேலன் அவளிடம் மிகவும் அன்பாயிருந்தானேயன்றி, தானே அவளை மணந்து கொள்ளக் கூடுமென்று அவன் எண்ணவேயில்லை. அவனுக்குத் தோன்றவுமில்லை.

ஆனுல், முதலியாரோ, தானுக வலுவிலேயே அவளைத் தன் மகனுக்குக் கலியாணம் செய்து வைத்துவிட்டால் அவள் தகப்பன் வகையைச் சேர்ந்தவர்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு, அவளை வற்புறுத்தி

யிருப்பதாகச் சொல்லக் கூடுமென்று அஞ்சினர்.

"என்னமோ அப்பா. இதுவும் தாயற்றது. அதுவும் தாயற்றது. மாமனர் மாமியார் ஒரு அருமை பெருமை ஒன்றுமில்லாமல் போவதைவிட, இருவருக்குமே நல்ல இடமாய் அமைந்தால் பார்ப்போமே? தவிற அவளோ இஷ்டமான வரையில் காத்திருக்கலாம். அதுவரையில் இவனும் காத்திருப்பானேன்?" என்பாள் தேவானையம்மாள்.

புனிதத்தின் இருதயத்தில் தணிகைவேலன் தான் இடம் பெற்றிருந்தான். ஆனால் அவன் தன்னை விரும்புகிறானா? இல்லையா? என்று அவளால் தீர்மானிக்க முடியவில்லை. "நான் அவனைப்பற்றி நினைத்தென்ன பயன்? அவன் என்னை அறிந்து கொள்ளாவிட்டால், என்ன உபயோகம்? அவன் மனநிலையை உள்ளபடி அறிய முடிந்தால் சரி. இல்லாவிட்டால்— ஏன். இப்படியே, கன்னியாகவே இருந்துவிடுகிறேன்" என்று எண்ணுவாள்.

ஆனல் தேவானையம்மாளும் முதலியாரும் கல்யாண விஷயத்தைப் பிரஸ்தாபிக்கத் தொடங்கியதிலிருந்து புனிதத்தின் மனதில் ஓர் புயற்காற்று வீச ஆரம்பித்தது. தேவானையம்மாள் அவள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடப்பவள் அல்ல என்றும் தணிகைவேலனுக்கும் தனக்கும் விவாகம் நடப்பதில் அவளுக்குப் பூரண சம்மதந்தான் என்றும் புனிதம் அறிந்திருந்தாள். முதலியாருக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பம் உண்டு என்றும் அவளுக்குத் தெரியும். ஆனல் தணிகைவேலன் தன்னிடம் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து அவன் மனோ நிலையைத் தெரிந்துகொள்ள முடியாதவளாய் தவித்தாள் புனிதம்.

தணிகைவேலன் புனிதத்திடம் மிகவும் வாத்ஸல்யமாய் இருந்தான். பாடங்களில் சந்தேகமிருந்தால் சொல்லிக் கொடுப்பான். ஏன், புனிதத்தின் பிரைவேட் வாத்தியார் தணிகைவேலன்தான்! கூடைகூடையாக வேடிக்கைக் கதைகளைச் சொல்லி புனிதத்தைச் சிரிக்கவைப்பான்; தேவானையம்மாளைச் சிரிக்கவைப்பான்; துக்கமே உருவான முதலியார்கூட அவன் பேச்சுக்களை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு தனக்குள் சிரித்துக் கொள்ளுவார். தணிகைவேலன் அவ்வளவு சரளமான இளைஞன்.

'ஹிப்னாடிஸம்' என்று சொல்வார்களே, அந்த சாஸ்திரம் தனக்கு மட்டும் தெரிந்திருந்தால் தணிகைவேலன் தன்னிடம் கொண்டிருக்கும் அபிப்ராயத்தை அறிந்துகொள்ளலாமே என்று எண்ணுவாள் புனிதம். இப்படிப்பட்ட எண்ணங்கள் திரண்டு வந்து புனிதத்திற்கு துயரத்தைக் கொடுத்தன.

"புனிதம்! பாட்டி உன் கல்யாணத்திற்கு பலமாய் ஏற்பாடு செய்கிறுப்போல் இருக்கிறதே! என்ன சமாசாரம்?" என்று தணிகைவேலன் கேட்டான். பிறகு, விழுந்து விழுந்து சிரித்துவிட்டு "கல்யாணம் ஆன மறுநாள் நாம் யாழ்ப்பாணத்திற்குப் போய் பதினைந்துநாள் இருந்துவிட்டு வரவேண்டும். உனக்குச் சம்மதந்தானே?" என்று கேட்டான். யாழ்ப்பாணம் என்று அவன் சொன்னதும் குலைகுலையாய்த் தொங்கும் இளநீர்களும் தலைசாய்ந்து செழிப்பாய் நின்ற தென்னை மரங்களும் அவள்முன் வந்துநின்றன. அந்த மரச்சோலையில் காலால் மணலை வாரி யிறைத்துக்கொண்டு தணிகைவேலனும் புனிதமும் கைகோர்த்த வண்ணம் நடந்து சென்றார்கள். அப்போது ஆனந்தமாய் வீசிய கடற்காற்று 'விர்' என்று வேகமாய் வந்து தணிகைவேலனின் அங்கவஸ்திரத்தை தூக்கிச் சென்றது. தணிகைவேலனும் புனிதமும் வஸ்திரத்தைப் பிடிக்க போட்டி போட்டுக்கொண்டு ஓடினார்கள். தணிகைவேலன் முன்னே ஓடி வஸ்திரத்தைப் பிடித்துவிட்டான். ஆனல் 'லபக்'கென்று பிடுங்கிக் கொண்டுவிட்டாள்; புனிதம் ஜெயித்துவிட்டாள்!...

இப்படியாக அன்றிரவு இன்பக் கனவு கண்டு திடுக்கெழுந்தாள் புனிதம். அதற்குப் பிறகு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. என்னமாக வரும் அவள் மனம் இதையே நினைத்துப் புளகாங்கிதம் அடைய ஆரம்பித்தபோது?

மறுநாள் அவள் உத்சாகம் உச்சநிலையில் இருந்தது. அவள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. ஆனல் அவள் எதற்காக அப்படிச் சந்தோஷப்பட வேண்டும்? அவள் கண்டது கனவுதானே?

(தொடரும்)

# கிராமத்திற்கு விஜயம்

(டாக்டர். டி. எஸ். ரமணி)

தை வெள்ளிக்கிழமை, ரத ஸப்தமி, ஒரு புண்ய தினம். சூரிய பகவானின் ரதம் இன்றுதான் வடக்கு முகமாகத் திரும்புகிற தென்று ஐதீகம். வெங்குவும் நானும் கிராமத்தை நோக்கித் திரும்பினோம். சந்தோஷத்திற்கு அளவேயில்லை. இருவரும் தோசையையும் காப்பியையும் சாப்பிட்டுவிட்டு, காலிலிருந்த கப்பிரோட் புழுதியையும் துடைத்துவிட்டு இரட்டை மாட்டு வண்டியில் புறப்பட்டோம்.

காலை வெயிலில் காவேரி நதியின் கரையில் இருக்கும் தென்னஞ் சோலைகளும், ஓட்டு மாங்தோட்டங்களும், எங்கள் மனதில் உண்டு பண்ணிய எண்ணங்களை எப்படி எழுதுவது? வழி முழுவதும் ஒரே பேச்சுதான். மணி மேகலை, சிலப்பதிகாரம், பழைமையாகிய புகார் பட்டணத்தின் சிறப்பு எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் மாறி மாறி எங்கள் உள்ளத்தைப் பூரிக்கச் செய்தன. இரண்டு மைல் தான் வண்டியில் போனோம். இயற்கையின் அழகை மனமார நோக்க வண்டியை விட்டு இறங்கி நடக்க ஆரம்பித்தோம். காவேரியின் கரையோடு நடக்க நடக்க எங்களிடம் ஒரு தனி வலிமை உண்டாவதைக் கண்டோம். வெங்குவால் நடக்க முடியாது. நானோ நடந்ததேயில்லை. மனம் இயற்கை அழகில் லயித்து இருக்கும் போது நம்முடைய தேகம் எவ்வளவு கடினமான வேலையையும் சிரமம் தெரியாமல் செய்ய முடியும் என்பதை நான் அப்போதுதான் உணர்ந்தேன். இதைப் பார்த்தால் சிரமம் 'என்று சொல்லும் போதெல்லாம் நம்முடைய முழு மனதும் காரியத்தில் ஈடுபடவில்லை என்று தோன்றுகிறது.

ஒரு மைல் நடந்திருக்கலாம். காவேரி கிழக்கேயிருந்து மேற்கே ஓடுமிடத்தைத் தாண்டியவுடன் ஐயாவைய்யன் வாய்க்கால் இத்துடன் வந்து சேருகிறது. இந்த இடத்தில் நின்றுவிட்டோம். ஆற்றின் கரையும் சற்று உயர்ந்து இருக்கிறது. இரு பக்கங்களிலும் ஒரே வெட்டவெளி. எதிரே வானில் இளம் கதிர். அக்கரையில் சுவேதாரண்யம், இக்கரையில் சங்காரண்யம். நடுவில் இரண்டையும் செழித்து ஓங்கச் செய்யும் காவேரி நதி. பேசிக் கொண்டே நின்றோம். முடிவேயில்லை. எதிரொலி கூட இல்லை! வெட்ட வெளியோடு வெளியாய் நின்றால் எப்படி எதிரொலி உண்டாகும்? எதிரே ஏதாவது தடையிருந்தால்தானே எதிரொலி கேட்கும்!

இயற்கையின் விநோதத்தை இன்னும் பார்க்க வேண்டும் என்கிற அவா, தானாகவே எங்கள் கால்களை நடக்கச் செய்தன. சற்று நேரத்திற்கெல்லாம் எதிரே காணும் காக்ஷி முற்றிலும் மாறி விட்டது. இயற்கையின் மாயையை உணர யாரால் முடியும்? சுற்றிப் பார்க்கும் இடமெல்லாம் சம வெளித் திடல். வானமும் பூமியும் சேருவதுபோல் தோன்றும். இடமெல்லாம் தென்னஞ் சோலை. நடு நடுவே ஒரு குடியானவன் திடலில் ஏர் உழுகிறான். தலைச் சுமையோடு சந்தைக்குப் போகும் பெண்கள் தூரப் பார்வைக்கு சித்திரத்தில் காணும் பதுமை போல் தோன்றுகிறார்கள். பரந்த வெட்ட வெளியில் உழும் ஓர் குடியானவனும் சுமையோடு நடந்து செல்லும் பெண்களும், மனிதனின் உலக யாத்திரையை எங்கள் மனதிற்கு நினைவூட்டியது.


சாவடிக்கு வந்து சேர்ந்தோம். இவ்விடம் என் சிநேகிதரின் உபசாரத்தைத் தட்ட முடியவில்லை. மறுபடியும் இட்லியும் காப்பியும் சாப்பிட்டோம். ஆறு மாதத்திற்கு ஒரு தரம்தானே வருகிறீர்கள் என்று சொல்லும்போது எப்படி மறுப்பது? வெங்குவோ இப்போதுதான் முதல் தடவை அங்கு வந்தது. ஆனால் வெங்குவின் நாவல்களின் பெயர்தான் அவருக்கு

முன்னால் அவ்விடம் பரவியிருக்கிறதே! சற்று இளைப்பாறி மேலே நடக்க ஆரம்பித்துச் சந்தைக்கு வந்து சேர்ந்தோம். சந்தையின் பரபரப்பு எங்கள் நிம்மதியைக் கலையச்செய்தது. கிராமத்தின் விளை பொருள்களை விற்கவும், வேண்டியவைகளை வாங்கிக் கொள்ளவும் சந்தை வாரம் ஒரு முறை இவ்விடம் கூடுகிறது. இப்பொழுதோ மளிகைக் கடைக்காரர்கள் தங்கள் சாமான்களைக் கொண்டு வந்து போட்டுக் கொண்டு விற்கிறார்கள். கிராமத்தில் விளைந்த புளியையும், போன வாரம் ஆலையில் உற்பத்தி செய்த வெல்லத்தையும் ஏழைக் குடியானவன் மளிகைக் கடைக்காரனுக்குப் போட்டியாக விற்க முடியவில்லை. உண்மையாகப் பாடுபடும் குடியானவன் முகத்தில் தோன்றும் சோர்வை நீக்க முடியாமல் மேலான கொள்கைகளைப் பிதற்றித் திரிகிறோமே என்றார் வெங்கு.

தரகர்களின் அக்கிரமத்தை இங்கும் நன்கு உணர்ந்தோம்; ஷேர் மார்க்கட், பஞ்சு மார்கட் இவைகளில்தான் இவர்களின் ஆதிக்கம் என்று நினைக்க வேண்டாம். கிராமத்துச் சந்தைகளிலும் இவர்கள் வைத்ததுதான் சட்டம். ஒரு குடியானவன் தன்னிடம் விளைந்த ஆறு மரக்கால் கடலைக் கொட்டையைக் கொண்டு வருகிறான். ஐந்து படி மரக்கால் ஒன்றை வைத்து அளந்து, மரக்கால இரண்டு அணா விற்கும்போது ஒண்ணே காலணாவுக்கு வாங்குகிறான் தரகன். இந்தக் கடலைக் கொட்டையும் வெளி நாட்டுக்கு ஏற்றுமதியாகிறது. குடியானவனுக்கோ வேறு வழியில்லை. இதை விற்று வந்த பணத்தைக் கொண்டு தான் உப்பு, புளி, மிளகாய் வாங்கி ஜீவனம் செய்ய வேண்டும். எப்படி ஏழைக்குடியானவன் வறுமை நீங்கியிருக்க முடியும்? நமது கிராமங்களும் பயிர் தொழிலும் க்ஷீண தசையை அடைவதன் காரணத்தை நேரிலேயே கண்டோம். இதைப் பார்த்த பிறகு சந்தையை விட்டுப் புறப்பட்டு விட்டோம். கிராம முன்னேற்றத்திற்கு என்ன செய்வது, எப்படி செய்வது, எதை முன்னால் செய்வது என்பது தான் எங்கள் யோஜனை. விவசாயியின் சிரமத்தை நேரிலேயே கண்டபிறகு, வழியில் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. மேலே நடந்து வெங்குவின் அத்தை வீடு வந்து சேர்ந்தோம்.

அந்த வீட்டில் எங்களுக்கு நடந்த உபசாரம் கொஞ்ச நஞ்சமல்ல. வயதான தம்பதிகள் இருவரும், சிறுவர்களாகிய எங்களை அடிக்கடி உபசரித்து, ‘இதை சாப்பிடு, அதில் இன்னும் கொஞ்சம் போட்டுக் கொள்’ என்று சொல்லும்போது வெங்குவும் நானும் சிரிப்பை அடக்க முடியவில்லை. நாங்கள் சந்தோஷப்படுவதைப் பார்க்க அவர்களுக்கு மேலும் மேலும் ஆனந்தம். இவர்கள் நீண்ட ஆயுளுக்குக் காரணம், பிரதி தினமும் பிறருக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணி தாங்களும் சந்தோஷமாக வாழ்வதுதான் என்று தோன்றிற்று.

உண்ட களை திண்டனுக்கும் என்பது போல், சாப்பிட்டவுடன் சற்று இளைப்பாறினோம்.




# அன்பு

முன்பு, புத்த மதத்தைச் சேர்ந்த ஒரே ஒரு வைர வியாபாரி ஒருவன் குடும்பத்துடன் சௌகர்யமாக வாழ்ந்து வந்தான். அவன் வீட்டில் ஒரு புத்த சந்நியாசி வாழ்ந்து வந்தார். வியாபாரியும் அவன் மனைவியும் சந்நியாசியை சொந்தத் தந்தைபோல பாவித்து அன்புடன் காத்து வந்தார்கள்.

ஒருநாள் அந்த வீட்டில் ஒரு எதிர்பாராத சம்பவம் நடந்தது. வியாபாரி ஓர் சிறிய வைரக்கல்லை செதுக்கிக் கொண்டிருந்தபோது கையில் ஆயுதம் பட்டு இரத்தம் பெருக ஆரம்பித்தது. அவன் அதைக்கவனியாமல் அவசரம் அவசரமாகக் காரியத்தைக் கவனித்தான். இந்த சமயத்தில் அந்த ஊர் அரசன் வைர வியாபாரியை அழைத்துக்கொண்டு வரும்படி ஆளை அனுப்பியிருந்தான். அந்த ஆள் வைர வியாபாரியைக் கூப்பிட்டவுடனே பதட்டத்தில் அவன் வைரக்கல்லைக் கீழே வைத்துவிட்டு அரண்மனைக்குச் சென்றான்.

சிறிது நேரத்திற்கு முன்னே வியாபாரியின் கையிலிருந்து இரத்தம் கீழே சிந்தியிருந்ததல்லவா? அந்த இரத்தத்தில் இந்த வைரக்கல் விழுந்து சிவப்பாக ஆகியிருந்தது.

வைர வியாபாரி ஒரு பட்சியை வளர்த்து வந்தான். அந்தப்பட்சி கூடத்துக்கு வந்தது. ரத்தம் சிந்தியிருந்த இடத்தைப் பார்த்தது. அதற்குக் கீழே கிடந்தது விலையுயர்ந்த வைரம் என்று எப்படித் தெரியும்? அது மாமிசத் துண்டு என்று நினைத்து அதை 'லபக்' கென்று விழுங்கிவிட்டது!

இந்தச் சம்பவத்தை எதிரே இருந்த குருநாதர் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் அவர் என்ன செய்யமுடியும்? பட்சியோ வைரத்தைத் தின்றுவிட்டுப் போய்விட்டது. இனிமேல் என்ன செய்வது?

அரண்மனையிலிருந்து வைர வியாபாரி வீட்டுக்கு வந்தான். வைரம் வைத்திருந்த இடத்திற்கு வந்தான்; அதைத் தேடிப் பார்த்தான்; அகப்படவில்லை. அதுதான் பட்சியின் வயிற்றில் இருந்ததே!

வைரத்தைக் காணாத அவன் பதைபதைத்து மனைவியிடம் ஓடினான். "எங்கே வைரம்?" என்று கேட்டான். "எனக்கு எப்படித் தெரியும்?" என்று அவள் திடுக்கிட்டுப் பதில் சொன்னாள். "ஐயோ! என் ஆஸ்தியெல்லாம் போய்விட்டதே! நான் என்ன செய்வேன்?" என்று கதறினான்.

மறு நிமிஷம் அவனுக்கு ஒரு கொடிய சந்தேகம் உண்டாயிற்று. குருநாதரிடம் வந்தான். "சுவாமி! வைரத்தை நீங்கள் எடுத்தீர்களா?" என்று கேட்டான். "இல்லை" என்று சொல்லி அவர் தியானத்தில் அமர்ந்தார்.

ஆனால் வியாபாரிக்குச் சந்தேகம் தீர்ந்தபாடில்லை. மறுபடியும் மனைவியிடம் சென்றான். "இந்தா! இந்த ஸ்வாமியார்தான் எடுத்திருக்க வேண்டும். அவன்தானே

அந்த இடத்தில் உட்கார்ந்திருக்கிருன். வேறு யார் அங்கே வந்து எடுத்திருப்பார்கள், சொல்லேன். அவன்தான் எடுத்து வைத்துக் கொண்டு ஒன்றும் தெரியாதது போல் நடிக்கிருன். அவனைக் கட்டி வைத்து உதைத்தால் நிஜத்தைச் சொல்லிவிடுவான்'' என்று சொன்ஞன். ''ஐயையோ! உங்களுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதா? ஸ்வாமி ஒரு நாளும் எடுத்திருக்க மாட்டார்'' என்று மறுத்தாள் அவள்.

ஆனல் வியாபாரி தான் சொன்னதை செய்கையில் காட்ட ஆரம்பித்தான். ஸ்வாமியாரைக் கொண்டு வந்து தூணுடன் கட்டி அடிக்க ஆரம்பித்தான். அவன் மனைவி எவ்வளவோ தடுத்தும் அவன் கேட்கவில்லை. ஸ்வாமியார் அப்பொழுதும் உண்மையைச் சொல்லவில்லை.

அடி பொறுக்க முடியாமல் குருநாதரின் உடலிலிருந்து ரத்தம் பெருகிவரத் தொடங்கிற்று. அப்பொழுது அங்கே வந்த பட்சி கீழே வழிந்த இரத்தத்தைச் சாப்பிட ஆரம்பித்தது. இதைப்பார்த்த வியாபாரி அப்பட்சியை உதைத்து தள்ளினன். அது உயிரற்ற பிணமாய் அது அந்தப் பக்கம் போய் விழுந்தது.

அந்தப் பட்சி இறந்து போனதைப் பார்த்தார் குருநாதர். தன்னை மேல்மேலும் அடித்துக் கொண்டிருந்த வியாபாரியைப் பார்த்து ''அப்பா! நிறுத்து! நிஜத்தைச் சொல்லிவிடுகிறேன்'' என்ருர். வியாபாரி ''வா அப்படி வழிக்கு'' என்ருன். ''இங்கே பார்! இப்போது அந்தப் பட்சி இறந்து விட்டபடியால் நான் நிஜத்தைக் கூறலாம். ஆனல் முன்னடியே நான் நிஜத்தைக் கூறினல்உயிரோடிருந்த அந்தப் பட்சியின் வயிற்றைக் கிழித்துக் கொன்றிருப்பாய். இப்போது அது இறந்துவிட்டது. அதன் வயிற்றைக் கிழித்துப் பார். அங்கே இருக்கும் வைரம்'' என்ருர்.

வியாபாரி திடுக்கிட்டு அதன் வயிற்றைக் கிழித்துப்பார்த்தான். சற்று முன்னே அது விழுங்கிய வைரம் பத்திரமாய் வயிற்றில் இருந்தது.

விழுந்தான் குருவின் காலில். தன்னை மன்னித்துவிடும்படி கேட்டான். தன்மேல் கருணை காட்டும்படி மன்ருடினன்.

ஆனல் குருநாதர் கண்கள் மூடிக்கொண்டன. தேகத்தில் உண்டான ரத்தப் பெருக்கைத் தாங்க முடியாமல் அவர் உயிர் நீத்தார்.

—பழைய பௌத்தக் கதையிலிருந்து.

# என்ன சொல்லுகிறார்கள்?

தற்பெருமை உள்ளவர்களிடம் தான் கொடுமை குடிகொண்டிருக்கும்.

* * *

கொடுமை என்பது மனிதனோடு பிறந்ததல்ல. ஆனால் தவறான போதனையாலும், கெட்ட பழக்கங்களாலும் உண்டாவது.

—ஹாமில்டன் பைப்

* * *

இந்த உலகத்தில் கொடுமையால் கொடுமையைக் களைந்துவிட முடியாது; அன்பால்தான் களையலாம்.

* * *

சண்டை போடுபவர்கள் இந்த உலகத்தைவிட்டு ஒருநாள் வெளியேறப் போகிறோம் என்பதை நினைப்பதில்லை; ஆனால் அதை அறிந்துகொண்ட சிலர் சண்டையை ஒழித்து சமாதானமாய் வாழ்வார்கள்.

—தர்ம பாதம்

* * *

மகாத்மாஜியின் நம்பிக்கையைப் பெறுவதே எப்போதும் என் லக்ஷ்யமாக இருக்கும். மற்ற எல்லா ஜனங்களின் நம்பிக்கைக்கும் நான் பாத்திரனாகி இந்தியாவின் ஒப்பற்ற மகா புருஷனின் நம்பிக்கைக்குப் பாத்திரனாகாமல் போனால் அது துக்ககரமான விஷயம்.

—ஸ்ரீ சுபாஷ் போஸ்

* * *

ஹரிஜனங்கள் மதம் மாறவேண்டுமென்று சொல்பவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பாரைப் பலப்படுத்த வேண்டுமென்ற கருத்துடன் சொல்லவில்லை. மற்ற மதங்களைப் பலப்படுத்திக்கொள்ளத்தான்.

—ஸ்ரீ. எம். ஸி. ராஜா

* * *

காங்கிரஸ் தலைமை அதிகாரத்தின் (Paramountcy) உதவி எப்பொழுது கிடைக்குமென்றால் அஹிம்ஸையைக் கடைப்பிடித்தால்தான். மிருக பலத்தில் நம்பிக்கை வைப்பவர்களுக்கு பிரிட்டிஷ் தலைமை அதிகாரத்தின் உதவி கிடைப்பது போல.

—காந்திஜி

* * *

பொய் சொல்லாமல், அவதூறு சொல்லாமல், பிறருக்கு இடைஞ்சல் உண்டாக்காமல் இருப்பவர்கள் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாகிறார்கள்.

—விஷ்ணு புராணம்

* * *

புத்திசாலித் தனமும் சாமர்த்தியமும் அன்பின் வழியே திருப்பப்படாவிட்டால் அவற்றால் என்ன பிரயோஜனம்?

—ஸ்ரீமதி ஸரோஜனி நாயுடு

* * *

பெடரேஷன் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, கொச்சி மன்னரும் அவரது பிரஜைகளும் சம்பந்தப்பட்டவரை, அவர்கள் இந்தியாவின் ராஜீய லட்சியத்தை அடைவதற்காக பிரிட்டிஷ் இந்திய சகோதரர்களுடனும் மற்ற சமஸ்தானங்களுடனும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று இப்போதே கூறுகிறேன்.

—ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டி

* * *

உண்மையான மதம் சட்டங்களாலும், சட்டசபைகளாலும் பாதிக்கப்படாதது.

—ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார்

* * *

உருதுவும் ஹிந்தியும் ஒரே இடத்திலிருந்து வரும் இரண்டு நீர் ஊத்துக்கள் போல அமைப்பிலும் தோற்றத்திலும் ஒன்றுதான்.

—ஸ்ரீ. ஜவஹர்லால் நேரு

* * *

ஒரு பத்திரிகை தேச விஷயங்களைப் பற்றி, பொதுப் பிரச்னைகளைப்பற்றி, எழுதும்போது கட்சிக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தால் உடனே அந்தப் பத்திரிகை தன் சுயேச்சையையும் தைர்யத்தையும் இழந்ததாகிறது.

—ஸ்ரீ. எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார்




### சர்க்கார் இன்ஷியூரன்ஸ் இலாகா

மைசூர் சர்க்காரிலுள்ள உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் இன்ஷியூர் செய்து கொள்ள வேண்டுமென்று 1890-ம் வருஷத்திலேயே கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. மாதாந்த சந்தா சம்பளத்தில் பத்தில் ஒரு பங்கு தொகையிலிருந்து ரூ. 70 வரை இருக்கிறது. மாதா மாதம் இந்தத் தொகை சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படுகிறது.

வேலையிலிருந்து நீங்கிய பிறகு பாலிஸிதாரரின் வருமானத்தை அதிகப்படுத்தவும், அகால மரண மேற்பட்டால் குடும்பத்திற்கு ஒரு பண உதவி உண்டாக்கவும் தான் முக்கியமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை சிவில் டிக்கிரிகள் மூலம் ஜப்தி செய்ய முடியாது.

இந்த திட்டத்தின்கீழ் 1938-ம் வருஷம் முடிய 33,052 பேர்கள் இன்ஷ்யூர் செய்து கொண்டிருக்கிறார்கள். 52,625 பாலிஸிகளின்கீழ் ரூ. 3,91,08,186 வாக்களிக்கப்பட்டிருக்கிறது. பாலிஸிதாரர்களுக்கும் வாரிசுகளுக்கும் அந்த வருஷம் வரை ரூ. 1,33,84,725 கொடுக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்காகமட்டும் தான் இந்த இலாகாவை முதலில் ஆரம்பித்தார்கள். 25 வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது பொது மக்களுக்கும் சர்க்கார் அதில் வசதி அளித்திருக்கிறார்கள். இந்த மாதிரி முயற்சியில் மைசூர் சர்க்கார் தான் முதல் முதலாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

பாலிஸிப் பணங்களுக்கு சர்க்கார் ஜவாப்தாரியாக இருக்கிறார்கள். இலாகா அநேகமாக சர்க்கார் இலாகாவாகவே நடத்தப்படுகிறது. 100 ரூபாய் முதல் 15,000 ரூ. வரை பாலிஸிகள் இருக்கின்றன. ஆகையால் ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை எல்லோரும் அதில் சேரலாம்.

சர்க்கார் இலாகாவாக இருந்தாலும் அதில் அதிகார தோரணைக்குள்ள சங்கடங்கள் ஒன்றும் இல்லை. பணம் பட்டுவாடா முதலியன வெகு ஜரூராக நடக்கின்றன.

பொதுமக்கள் இன்ஷியூர் செய்யும் பிரிவில் 1938-ம் வருஷ முடிவு வரை பங்குதாரர்களுக்கும் வாரிசுகளுக்கும் ரூ. 18,50,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜூன் முடிய 33,179 பாலிஸிகள் சேர்ந்திருக்கின்றன.

**—மைசூர் சர்க்கார் விளம்பர இலாகா.**

### சர்வாதிகாரிகள்

யூதர்களிடம் ஜெர்மனி நடந்து கொள்ளும் முறையைக் கண்டிப்பதில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டி இருக்கிறது. ஏனென்றால் சிறுபான்மையோரை நடத்தும் விஷயத்தில் அவர்கள்கூட அவ்வளவு சுத்தமாக இல்லை.

நம் நடத்தை மகா கேவலமானது. ஜெர்மனி பாவம் நமது சரித்திரத்தை உற்று நோக்கவில்லை. எங்கோ பாலஸ்தீனத்தில் ஒரு வாலிபனை சுட்டுவிட்டதை வைத்துக் கொண்டு பிரமாதப்படுத்துகிறார்கள். நமது சரித்திரத்தில் நடந்திருக்கும் அட்டூழியங்களுக்கு இதெல்லாம் உரைபோடக்காணுமா? கிராம்வெல் காலத்திற்கு முன்னால்கூடப் போக வேண்டாம். அந்த மகான் ஐரிஷ் மக்களையே ஹதம் செய்து விடவேண்டுமென்று யோசித்தார். கத்தோலிக்கர்களையும், பிராடஸ்டன்ட்களையும், க்வேகர்களையும், வெல்ஷ், ஐரிஷ், ஸ்காட் தேசத்தவர்களையும், சீனர்களையும், இந்தியர்களையும், நீக்ரோக்களையும் ஆஸதிரேலியக்கருப்பர்களையும் ஆசியாவின் மலைஜாதியினரையும் நாம் கொஞ்சம் பாடா படுத்தியிருக்கிறோம்? கண்ணிற்பட்டால்கூட சுட்டுத்தள்ளும் வரைகூடப்போயிருக்கிறோம்.

அமெரிக்காவிற்கு யூதர்கள் படும்பாட்டைக் கண்டு ஆத்திரம்தான் வருகிறது. ஆனால் என்ன செய்கிறது? ஜெனரல் கோயரிங்கிற்கு தர்மோபதேசம் செய்ய முடியாதே? அவர் திருப்பியல்லவா கேட்டு விடுவார் உன் யோக்கியதை என்ன என்று. கிளுக்ளக்ஸ் கிளான், நீக்ரோக்களை கசையடி அடிப்பது, சிகாகோ மதுவிலக்கு எதிர்ப்பு கோஷ்டி—

இந்த மாதிரி அமெரிக்கநாகரிக அம்சங்களை அவர் சுட்டிக்காட்ட மாட்டாரா?

இந்த பூர்வோத்திரங்களை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது ரொம்ப அவசியம். ஏனென்றால் இப்பொழுது நமக்குத் திடீரென்று தர்மத்தை ஸ்தாபிப்பதில் ஆவேசம் வந்துவிட்டது. அமெரிக்காவுக்கும் தான்.

சர்வாதிகாரிகளை எப்படி வழிக்குக் கொண்டுவருவது? அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். நீரோவைப் போலவும் ஒன்றும் நிகோலஸ் போலவும் தம் வீட்டார்களாலேயே ஒழிக்கப்படும் வரையில் அவர்கள் செய்வதற்கு வேறு விமோசனமே கிடையாது.

ஹிட்லர் வாஸ்தவத்தில் பைத்தியக்காரர் அல்ல. கைகாரப் பேர்வழிதான். ரொம்ப நிதானமான ஆள்தான்—அநேக விஷயங்களில். ஆனால் அவருக்கும் ஒரு பித்து இருக்கிறது. யூதவைஷம்ய வியாதிதான் அவரைப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

600000, யூதர்களை ஹிட்லர் பிறநாடுகளின் தலையில் கட்டப் பார்த்தால் அதைச் சும்மா விட்டுவிட முடியுமா? நாமென்ன செய்வது? எங்களுக்கு வேண்டாம் பொத்தல் பூசனிக்காய் என்று சொல்லவேண்டும். ஜெர்மனி எனக்கு வேண்டாம் என்கிறது. யூதர்கள் பெலுனிலா வாசம் செய்வார்கள்? முடியாது. அவர்களைக் கடலில் தள்ளவேண்டியது தான்.

இதை நாகரிகம் பார்த்து சகிக்குமா என்றால் ஹிட்லர் நாகரிகம் எதை வேண்டுமானாலும் செய்யும் என்று பதில் சொல்லுவார்.

—பேர்னர்ட் ஷா.

## ஹிந்து மதம்

ஹிந்து மதத்தின் கொள்கைகள் முன்னேற்றமில்லாமல் இருக்கின்றன; தனித்தன்மை யற்றதாயும் ஸகஜத்தன்மைக்கு விரோதமாகவும் இருந்தன என்று சிலர் குறை கூறுகிறார்கள். அதாவது, முன்னேற்றமும் விருத்தியும் உள்ள சட்டங்கள் ஹிந்து மதத்திற்குப் பொருந்தாது என்று அர்த்தமாகிறது. இப்படிக் குறை சொல்லுவதின் காரணம் சந்தேக மனப்பான்மைதான். தனிப்பட்டவர்களோ சமூகமோ இகபர புருஷார்த்தங்களை அடைய ஹிந்து தர்ம முறையைக் காட்டிலும் சிறந்த சாதனத்தைக் கண்டுபிடிப்பது அறிதாகும். சேவை என்ற கொள்கை ஹிந்து தர்மத்திற்குப் புதிதல்ல. **கிருஹஸ்த தர்மம்** என்பதின் தத்துவமே சேவைதான். தற்கால சமூகத்தின் தேவைகளும், சேவையின் தன்மையும் முந்காலத்திலுள்ள ஹிந்து சமூகத்திலிருந்ததைவிட மாறுபட்டதாய் இருக்கலாம். ஆனால் அதற்காக ஹிந்து மதத்தில் சேவை என்ற அம்சமே கிடையாது என்பது தவறாகும்.

— ஜஸ்டிஸ் ராவ்பகதூர்
எஸ். வரதாச்சாரியார்.

## தொழில் திட்டம்

எதிர்காலத் தொழில் சம்பந்தப்பட்டவரை தேசத்திற்குத் தேவையான பருத்தி, சணல், இரும்பு, முதலிய பெரிய தொழிற்சாலைகள் வேண்டும். மோட்டார் கார்களும் ரயில் என்ஜின்களும், இயந்திரங்களும் நம் தேசத்திலேயே செய்யப்படவேண்டும். ஆனால் இந்த தேசத்தில் ஏழு லக்ஷம் கிராமங்கள் உள்ளன என்பதையும் நூற்றுக்கு 80 ஜனங்கள் கிராமங்களில் வாழ்கின்றார்களென்பதையும் நாம் மறக்கக் கூடாது. நூற்றுக்கு தொண்ணூறு ஜனங்கள் விவசாயத்தினால் பிழைக்கிறார்கள். இந்தியாவின் எதிர்காலத் தொழில் அமைக்கும் கூட்டமுல் இந்த விஷயங்களைமனதில் வைத்துக்கொள்ளலாம். நாம் செய்த சாமான்களை பர்மா, ஸிலோன், ஆப்பிரிக்கா தவிர மற்ற வெளிநாடுகளில் விற்க முடியாது. ஏனென்றால் மற்ற தேசங்கள் பொருளாதாரத்திலும் தொழில்களிலும் பூர்ணத்துவத்திற்கு சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்காக நாம் தொழில் திட்டத்தை புதிய வழியில் அமைக்கக் கூடாது என்பதல்ல. நம் தேசம் பெரியது; பொருள் மூலங்கள் ஏதேஷ்டமாக இருக்கின்றன. ஜனப்பெருக்கைப் பற்றி நாம் கவலைப்படக் காரணமுமில்லை. ஜனங்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கவேண்டும். அதற்காக ஒருபுறம் பெரிய தொழிற்சாலைகளை சிற்சில இடங்களில் ஏற்படுத்தி மற்றொரு பக்கம், எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் கிராமக் கைத்தொழில்களை வளர்க்க வேண்டும்.

—ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி.

## ஜன நாயகம்

தற்கால அரசாங்கங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிகாரம் தனிப்பட்ட நபர்களுக்கு உள்ள அதிகாரத்தைப் பிடுங்கிக்கொண்டதால் உண்டானது. தனி நபர்களின் சுயேச்சைக்கு யுத்த காலங்களில் மட்டுமல்லாமல் சமாதான காலங்களில்கூட, இடைஞ்சல்கள் உண்டாக்கப்படுகின்றன. அரசாங்கத்திடம் அதிகாரம் இல்லாமல்போனால் ஜனங்களுக்கு 'சமத்துவம்' இராது என்றும் தனிப்பட்ட நபர்களுக்கு சுயேச்சை இருந்தால் அது சில பேர்கள் மற்றவர்களைக் காட்டிலும் ஐசுவர்யத்தை

அடைய காரணமாயிருக்குமென்றும் நம்பப் பட்டது.

தற்கால அதிகார வர்க்கம் தற்கால ஜன நாயகத்தின் ஓர் ஆச்சரியமான அரசியல் அங்கமாகும். உலகத்தில் ஒவ்வொரு அரசாங் கத்திலும், அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் மிகவும் துரிதமாக ஸிவில் ஸர்வீஸ் பலம் பெற்று வருகிறது. அரசாங்கம் முன்னை விட அதிகமான வேலைகளைச் செய்யவேண்டிய தால் இது அவசியமாயிற்று. இன்றைக்கு சட்டங்களைத் தான் சட்டசபை நிறை வேற்ற முடியும். ஆனால் அமுலுக்குக் கொண்டு வருவது அதிகார வர்க்கம் தான். தன் டிபார்டுமெண்ட் போடும் ஒவ்வொரு ரூலையும் ஒரு மந்திரி பார்த்துக்கொண்டிருக்க முடி யாது.

உங்களுடைய சுயேச்சை பாதிக்காமல் இருக்கவேண்டுமானால் பழைய ஜனநாயகத் துக்கும் புதிய ஜனநாயகத்துக்குமுள்ள வித்தி யாசத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

—ஸ்ரீ. எம். ரத்னஸ்வாமி.

---

## புத்தக விமர்சனம்

"ஜனசக்தி மலர்கள்" நான்கு வரப் பெற்றோம். முதல் மலர் "சோஷியலிஸ்ட் பாடல்கள்" ஸ்ரீ ப. ஜீவானந்தம் எழுதி யது. சுலபமான மெட்டுகளில் அபேதவா தத்தின் தத்துவங்களைப் பாடல் உருவங் களில் அமைத்திருக்கிறார்.

இரண்டாவது மலர் ஸ்ரீ ஜீவானந்தம் எழுதிய "சோஷியலிஸத்தின் சரித்திரம்". மேனாடுகளில், முக்கியமாக இங்கிலாந்தில், அபேதவாதம் பிறந்து வளர்ந்த வகையைச் சுருக்கமாகச் சொல்லி மார்க்ஸின் கொள் கையையும் விளக்குகிறார்.

மூன்றாவது மலர் ஸ்ரீ ஜீவானந்தம் எழுதிய "வர்க்கப் போராட்டம்". மே னாட்டு அபேதவாதத்தின் அடைப்படை யான (Class warfare) வர்க்கப்போரைக் இதில் ஆசிரியர் நன்றாக எடுத்துக் காட்டு கிறார்.

நான்காவது மலர் ஸ்ரீ ஏ. எஸ். கே. அய்யங்கார் எழுதிய "ரஷியப் புரட்சி." ரஷியாவில் எப்படி யதேச்சாதிகாரம் ஒழிந்து அபேதவாதம் ஸ்தாபனமாயிற்று என்றதை ஆசிரியர் இந்தப் புத்தகத்தில் சுருக்கமாகச் சொல்லுகிறார்.

---

அஹிம்சை என்பது ஒருவரிடம்இருக்க வேண்டிய தனியான நற்குணம் மட்டு மல்ல; மற்ற நற்குணங்களோடு கடைப் பிடிக்கவேண்டிய ஒரு சமூக நற்குணம்; ஒருவருக்கொருவர் நடத்தும் கொடுக்கல் வாங்கல் முதலிய எல்லாக் காரியங்களி லும் இருக்கும் அஹிம்சைதான் சமூகத் திற்கு அடிப்படையாயிருக்கிறது. நான் கேட்கிறதென்னவென்றால் தேசிய, சர்வ தேசீய விஷயத்திலும் அதைக்கொண்டு வரவேண்டுமென்றுதான்.

—காந்திஜி

---

## முதல்தர விமான நிலயம்

கராச்சியில் ஐந்து முக்கியமான விமான மார்க்கங்கள் கூடுகின்றன; உலகத்திலேயே அது பெரிய விமான மார்க்க 'ஜங்ஷன்' களில் ஒன்று. அதனுடைய புதுக் கட்டிடங் களை சிந்து கவர்னர் டிஸம்பர் 5, 6, தேதி களில் திறந்துவைத்தார்.

கராச்சியிலிருந்து பிரியும் பாதைகளி லிருந்து 20 தேசங்களுக்கு விமானப் போக்கு வரத்து ஏற்படுகிறது. அந்தப் போக்கு வரத்து மூன்று கண்டங்களில் பரவி இருக்கிறது.

கராச்சி விமான நிலயக் கட்டிடத்தைப் போல் இந்தியாவிலேயே வேறெங்கும் அவ் வளவு விசாலமாகக் கிடையாது. விமானம் இறங்கும் இடம், பாதை காட்டும் இலாகா வயர்லெஸ் நிலயம், சீதோஷ்ண ஆராய்ச்சி நிலயம், காலநிலை அறிவிப்பு இடம், பிரயாணி கள், சாமான்கள் பரிசோதனை இடம், தபால் ஆபீஸ், பாஸ்போர்ட் வைத்திய பரிசோதனை இடம்—எல்லாம் இதற்குள் இருக்கின்றன.

பிரயாணிகளின் சௌகரியத்திற்காக ஹோட்டல் படுக்கை அறைகள், தங்கும் இடங்கள், கக்கூஸுகள், தபால் ஆபீஸ், தந்தி டெலிபோன் ஆபீஸ், புத்தகசாலை— இவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.